1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது
Telegrams: "CATHOLIC PRESS", JAFFNA.
Telephone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

81-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1956-ம் ஆண்டு தைமாதம் 5-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 1-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### வண. வி. ஆர். தார்சீசியஸ்சுவாமியார்

ஊர்காவற்றுறைக் கட்டளைக்குருவரான வண. வி. ஆர். தார்சீசியஸ்சுவாமியவர்கள் நம்மேற்றிராணியாண்டவரின் ஆலோசனைச்சங்க அங்கத்தவர்களில்ஒருவராகத் தெரிவுசெய்யப்பெற்றிருக்கின்றார்.

### அரிசிவிலை குறையுமா?

பங்கீட்டரிசியின்விலை சென்றஆண்டின் வைகாசிமாதத்திலே படிஒன்று 55 சதத்திலிருந்து 50சதமாகக் குறைக்கப்படலாயிற்று. உணவு-கமத்தொழில் மந்திரியாரின் நிரந்தரகாரியதரிசியான திரு. கே. ஆழ்வாப்பிள்ளை அவர்கள் பர்மாசென்று பர்மிய அரசாங்கத்துடன் கலந்துபேசிப் பர்மா அரிசியின்விலையைக் குறைக்க வழிபண்ணியமையாலே இவ்விதம்பங்கீட்டரிசியின்விலை குறைக்கப்படலாயிற்று. திரு. ஆழ்வாப்பிள்ளை அவர்கள் பர்மாஅரிசியை மேலும் மலிவானவிலையிலே பெறும்நோக்கமாகப் பர்மியஅரசாங்கத்துடன் கலந்துபேசுமாறு இம்மாதம் 10-ந்திகதிவரையிலே மீளவும் பர்மாவுக்குச் செல்லவிருக்கின்றார். இலங்கை-சீன உடன்படிக்கைப் புதியநிபந்தனைகளின்படி சீன அரிசியின்விலை உலகசந்தைவிகிதத்தில் குறிக்கப்படும். சீனாவும் உலகசந்தை விலைவிகிதத்திலே பர்மா அரிசியின்விலையை ஏற்றுக்கொள்ள விரும்புவதாகத் தெரியவருகிறது. அப்போது குறைந்தவிலையிலே இலங்கைக்கு அரிசிகிடைக்கும்.

### றெயின்வண்டிகளும் மதுபானமும்

சிலறெயின்வண்டிகளிலே குடிவகைகள்விற்பதை விலக்கிவிட முடியாதென்று றெயில்வே ஜெனறல்மனேஜர் பி. டி. றம்பாலா அவர்கள் தெரிவித்திருக்கின்றார். கரையோரப்பாதைகளிலே தினமும் றெயின்வண்டிகளில் பிரயாணஞ் செய்கிறவர்களின் ஐக்கியசங்ககாரியதரிசிக்கே அவர் இவ்விதம் தெரிவித்துள்ளனர். தேவைப்படும் பிரயாணிகளுக்கு றெயில்வே குடிவகைகளை விற்கின்றது; எவராவது குடிவகை அருந்திவிட்டு ஏனையபிரயாணிகளுக்கு வசதியீனங்களை உண்டு பண்ணினால் அதே றெயின்வண்டிகளில் பிரயாணஞ் செய்யும் றெயில்வே அதிகாரிகளுக்குத் தெரிவிக்கவேண்டும்; அப்போது அவர்கள் வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்களென்றும் அவர் தெரிவித்துள்ளனர்.

### ஆசிரிய பயிற்சிக் கலாசாலை

கொழும்புத்துறை சஞ்சூசையப்பர் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை நத்தால் விடுமுறைமுடிந்து இம்மாதம் 11-ந் திகதி காலை ஆரம்பமாகும். மாணவர் 10-ந்திகதி பின்னேரம் விடுதியிலிருக்க வேண்டும்.

### கொழும்புநகரும் கண்டிநகரும்

அகில-இலங்கைப் புத்தமகாநாட்டின் 37-வது வருடாந்தகூட்டம் நிகழும் தைமாதம் 14-ம், 15-ந்திகதிகளிலே நீர்கொழும்பில் நடந்தேறவிருக்கின்றது. அதிலே இலங்கையின் தலைநகரைக் கண்டிமாநகருக்கு மாற்றும்படியாகக் கேட்கும்பிரேரணைஒன்றும் எடுத்தாளப்படவிருக்கிறது. அதாவது புத்தஜயந்திவிழாக் காலத்திலே ஸ்ரீலங்காவின் தலைநகரைக் கண்டியில் ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவேண்டும்; ஏனெனில் நாட்டின் ஆத்மீக-கலாசார வாழ்க்கையின் மகாதகுதிவாய்ந்த மத்தியதானமாகக் கண்டிநகர் இருக்கின்றது; மேலும் தலைநகரை இவ்விதம் மாற்றியமைப்பதானது கொழும்புநகரிலே மிதமிஞ்சிய சனப்பெருக்கப் பிரச்சினையைத் திருப்திகரமாகச் சமாளிப்பதற்கும் வழியேற்படுமென்று அப்பிரேரணையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

### பிரியாவிடைகூறிய கொலைஞன்

தனதுசகோதரனை யோசெவ் பெரேறாவைச் சென்றவருடம்ஆனிமாதம் 14-ந் திகதியன்றிரவு ஓர் தண்டினால் அடித்துக் கொலைசெய்த சிமியோன் பெரேறாஎன்பவன் நீர்கொழும்புச் சுப்பிறீங்கோட்டிலே விசாரணைசெய்யப்பெற்றுக் கொலைக் குற்றவாளியாகி அன்றுபுதன்கிழமை மாரணதண்டனை விதிக்கப்பட்டனன். அப்போது அவன் கோட்டிலே சமுகமாயிருந்த சிநேகிதர்களுக்கெல்லாம் தனது கைக்குட்டையை எடுத்து உயர்த்திப் பிரியாவிடைகூறினான். அத்துடன் தான்பிரதிமைப்படம் பிடிக்கப்படவேண்டுமென்றும், தான்எழுதிய சிலசுலோகங்களை "லங்கா தீபா" எனும் பத்திரிகையில் பிரசுரஞ்செய்ய அனுமதிக்கவேண்டுமென்றும் அவன் கேட்டுக்கொண்டான்.

### காலநிலை

காலமழை பொய்த்துவிட்டமையாலும், இடையிடையேவீசிய கச்சான் காற்றினாலும் குடலைதள்ளும் பருவத்தில்இருந்த நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டுக் கருகிக்கொண்டு போகின்றன. சிலஇடங்களில் நெற்பயிர்கள் வெகுவாகச்சேதமடைந்து வைக்கோலாகிவிட்டன. இன்னும் சிலதினங்களில் மழையில்லையானால் ஏனையபயிர்களின் பாட்டைப்பற்றியும் பேசவேண்டியதேயில்லை.

### கல்லூரி ஆரம்பம்

நத்தால் - புத்தாண்டு விடுமுறைகாலம்முடிந்து சம்பத்திரிசியார்கல்லூரி இம்மாதம் 10-ந்திகதியாகிய வருகிற செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும்.

### பத்துநாள் மதுபான விலக்கு

இவ்வருடம் புத்தஜயந்திக் கொண்டாட்டங்களின்போது பத்துநாட்கள் வரையில் தவறணைகளும், சில்லறையாகக் குடிவகைவிற்பனவுசெய்யும் சாலைகளும் மூடிவிடப்படும்; இலங்கைமுழுவதிலுமுள்ள அவற்றின் சொந்தக்காரருக்கெல்லாம் வியாபார நஷ்டபரிகாரஞ் செய்யப்படுமென்று ஊவாமாகாண அரசாங்கஏசன்றரான திரு. கே. எம். டி. ஜயனெற்றிஅவர்கள் தெரிவித்திருக்கின்றார். அடுத்த வைகாசிமாதத்திலே ஜயந்தி ஆரம்பமாகும்போது, குடிவகையும், மாமிசமும் விற்பனவுசெய்வதைக் குறைந்தபட்சம் ஒருவாரகாலத்துக்கு அரசாங்கம் விலக்கிவிட்டால் என்னவென்ற கேள்விஒன்றை வதுளைப்பட்டினசங்க அங்கத்தவர்ஒருவர் பொறித்தபோதுதான் முன்சொன்னவாறு அரசாங்கஏசன்றர் தெரிவித்தார்.

### ஒற்றைக்கண் தானம்

எச். கெமானந்த தெரோ என்னும் புத்தகுரு தேவைப்படும்எவருக்காவது தனதுகண்களில் ஒன்றைத் தானஞ் செய்துவிடும் நோக்கமாகச் சிலதினங்களின்முன் கொழும்பிலுள்ள அரசினர் பெரியஆஸ்பத்திரி சென்றார். ஆனால், அங்கே அவரது கண்தானம் நிராகரிக்கப்பட்டுவிட்டது. அதனால்அவர் ஜின் தோட்டையைச்சேர்ந்த கலவத்தையிலுள்ள தனது குகைக்குத் திரும்பியிருக்கின்றார். ஆயினும் சட்டமுறையாகத் தனது ஒற்றைக்கண்ணைத் தியாகஞ்செய்ய அனுமதிக்கப்படும் காலத்திலே அவ்வாறு அதனைத் தியாகஞ் செய்வதென அவர் திடதீர்மானஞ் செய்திருக்கின்றார்.

### அரசாங்க ஆயுர்வேதபகுதி

ஆயுர்வேத வைத்தியவிஷயமாய்ச் சிபாரிசுசெய்யப்பட்ட வெள்ளைப்பத்திர அபிப்பிராயங்களை நிறைவேற்றிவைக்கவேண்டுமெனக் கேட்டுத் தம்மைப்பேட்டிகண்ட ஆயுர்வேதவைத்தியர்களின் தூதுக்கோஷ்டிக்குச் சுகாதார மந்திரியார் திரு. ஈ. ஏ. நுகெவெலஅவர்கள் அளித்த பதிலிலே: சுகாதார மந்திரிசபை ஆதீனத்தின்கீழ் இந்தத்தைமாசத்திலே அரசாங்க ஆயுர்வேத பகுதிஒன்று ஸ்தாபிக்கப்படுமெனத் தெரிவித்திருக்கின்றார். மேலும் சுதேசவைத்திய கல்லூரியிலே நோய்நிதானஞ்செய்வதற்கும், வைத்தியசிகிச்சை செய்வதற்குமாக மேல்நாட்டுமுறைகள்படிப்பிக்கப்படவேண்டுமெனச் சிபாரிசுசெய்வதற்கும் அவர் சம்மதித்திருக்கின்றார்.

### மந்திரியாரும் மொழிப்பிரச்சினையும்

இலங்கையின் மொழிப்பிரச்சினையானது அடுத்தமாசிமாதம் 17-ந் திகதி கூடவிருக்கும் ஐக்கியதேசியக் கட்சிமகாநாட்டிலே தீர்க்கப்படும்; சிறுபான்மைச் சமூகங்களின் ஒத்துழைப்போடும், நல்மனதோடும் சிங்களம் அரசாங்க பாஷையாக்கப்படும்; பாஷைமாத்திரமல்ல, நாடுமேபாதுகாக்கப்படவேண்டியிருக்கையில் சிங்களத்தைஅரசாங்கபாஷை ஆக்கும்படியாய் அரசாங்கத்தைக் கேட்பதற்காகக் கூட்டங்கள் நடத்தவேண்டிய அவசியமில்லையென்று நிதிமந்திரியார்திரு. எம். டி. எச். ஜயவர்த்தனஅவர்கள் அன்று கலகெதிரையிலே அந்நியோன்னியதாசமித்தியாவின் மூன்றாவதுவருடபொதுக்கூட்டத்தில்பேசியபோது கூறியிருக்கின்றார்.

### புதிய சமாதான நீதவான்

மானிப்பாயைச்சேர்ந்த பிரக்கிராசியார் திரு. எஸ். இராசேந்திரம் அவர்கள் ஜே. பி. எனப்படும் சமாதானநீதவானாக நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்றார்.

### பட்டாசுகளும் விபத்துகளும்

சென்றவருடம் சிங்கள-தமிழ் வருடப்பிறப்பின்போது பட்டாசுகள்விஷயமாய்ப் பொதுசனங்களைப் பொலிசர் எச்சரித்திருந்தார்கள். ஏனெனில், அவற்றிலே சிலஇன வெடிகளும், வாணங்களும்அபாயமான ரசாயனகலவைகளைக் கொண்டிருக்கின்றனவென்றும், அவைகள் வெடிக்கும்போது சமீபத்தில் நிற்பவர்களுக்குக் காயமுண்டுபண்ணுமென்றும் பரிசோதனையிலே கண்டறியப்படலாயிற்று. இவ்வித வெடிகளைச் செய்வது சட்டவிரோதமாகும். இம்முறை கிறிஸ்மஸ் விழாவின்போது இந்தவெடிகளால் இலங்கை முழுவதிலுமே பலவிடங்களிலும் அநேகர் காயமடைந்திருக்கின்றனர். அவ்விதம் காயமடைந்த சுமார் 200பிள்ளைகள் கொழும்பிலுள்ள பலஆஸ்பத்திரிகளிலும் பரிகரிக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களிலே சிலபிள்ளைகளுக்கு விரல்களைத் துண்டிக்கவேண்டிய அவசியமேற்பட்டது. ஏழுபிள்ளைகள் கோர காயம் அடைந்துள்ளனர். அதனால் பொலிசர் கொழும்பிலே வாணங்கள், வெடிகள்செய்யும் மூன்றுபெரிய தொழிற்சாலைகளைத் திடீர்ப்பரிசோதனை செய்தும், சில்லறைவியாபாரிகளிடம் இருப்பிலேயிருந்த வெடிகள், வாணங்களைக் கைப்பற்றியுமிருக்கின்றனர்.

### குடிவகை லைசென்ஸ்கள்

இலங்கையிலே மதுபானவிலக்கு விஷயமாய் ஓர்முடிவுசெய்யப்படும் வரையிலே குடிவகை விற்பனை லைசென்ஸ்களையெல்லாம் புதுப்பிக்க அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வத்திக்கான் அல்லது ஒளியின் நகர்

பரிசுத்த பாப்பரசருக்குச் சொந்தமான 108 ஏக்கர் நிலப்பரப்புத்தான வத்திக்கான் இராச்சியம். உலகமாகிய பாலைவனத்திலே அதனை ஒருபசிய சோலைக்கு ஒப்பிடலாம். குழப்பங்களும், நிர்ப்பந்தங்களும் உலகதனையே விழுங்குவனபோன்று எதிர்கொள்ளினும வத்திக்கான் இராச்சியம் தொன்றுதொட்டு அனுபவித்தஅமைதியை இன்னுமேஇழக்கவில்லை. பாப்பரசர் உலகத்தையே சூழ்ந்திருக்கும் நாஸ்திக கம்யூனிஸத்தைக் கண்டிக்கலாம், சமூகக்கொள்கைகளை நவீன காலத்திற்கேற்றவாறு மக்களுக்கு உணர்த்தலாம். புதுப்புதுத் திட்டங்களைத் திருச்சபையின் அமைப்பில் புகுத்தலாம். ஆனால், வத்திக்கானின் பழமைஅழகு குன்றவேகுன்றாது.

வத்திக்கான் இராச்சியத்தில் என்ன காணகிறோம்? பழைய அரண்மனைகள், சிறியனவும், பெரியனவுமான தேவாலயங்கள், பெரியபெரிய நூலகங்கள், பழம்பொருட்காட்சிகள், கலையகங்கள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றைத் தவிர வேறொன்றும் அங்கில்லை. ஓராயிரம்மக்களின் குடும்பங்களே அங்கு வாழ்கின்றன.

ஆனல், பாப்பரசரது செங்கோலின் கீழ்வாழ அவர்கள்பெற்ற பேறுதான் என்ன? உலகத்தலைவரது பராமரிப்பில் வாழ்வதுமட்டுமல்ல, உலகின் மற்ற இராசசியங்களைவிட உபயோகமான பலஉரிமைகளையும் வத்திக்கான்குடிகள் அனுபவிக்கின்றார்கள். வாடகை, வருமானவரிபற்றிய தொல்லையே அங்குள்ளாருக்குக் கிடையாது. விலைவாசிகள் அங்கு குறைவாயிருக்கும். வத்திக்கானிலுள்ள சகலமும் பாப்பரசரின் அரசாங்கத்திற்கே உரியது. இவ்வரசாங்கத்தின் நோக்கம் பணம்திரட்டுவதல்ல, ஆத்துமங்களைத் திரட்டுவதே. ஆகையால், இன்றியமையாத தேவைகள் குறைந்தவிலையில் கிடைக்கும். உணவு, உடைஆகியவைகளை மற்ற இடங்களைவிட மிகவும்குறைந்தவிலை கொடுத்துப்பெறலாம். உதாரணமாக, சிகறெற்ஒன்று இரண்டுசிவினுக்குக் கிடைக்கும். ஆனல், வத்திக்கானுக்கு வெளியே 100 கெசதூரத்தில் அதைப்போல் இரட்டிப்பானவிலை கொடுக்கவேண்டியிருக்கின்றது.

வத்திக்கான் எல்லைக்குள் பிறந்தவரெல்லாம் அதன் குடிமகனாகலாம். ஆனல், 21 பிராயமானபின் அங்கே வேலைகிடையாதிருந்தால் வத்திக்கான் குடிமகன் என்ற உரிமை தானகவே நீங்கிவிடும். ஆனல், வேலையில்லாத் திண்டாட்டம் அங்கில்லாததினல் அவ்வாறு உரிமையைஇழப்பவர் மிகச் சிலரே. அநேகமாக வத்திக்கானிலுள்ள குடும்பங்களிலே தந்தையின் அலுவலை மகன்ஏற்பது வழக்கம். உதாரணமாக, கூரைமேலேறிச் சுத்தம் செய்தல், பழுதுபார்த்தல், அலங்கரித்தல்முதலாம் அபாயகரமான அலுவல்களைச்செய்ய ஒருபண்டையகுடும்பம் உள்ளது. வத்திக்கானிலுள்ள நூற்றுக்கணக்கான அடிஉயரமுள்ள கோபுரங்களின் உச்சிமட்டும் பயமின்றிஏறித் திருவிழாக்காலங்களில் ஆயிரம் மின்சாரவிளக்குகளாலான அலங்காரங்களை இக்குடும்பத்தினரே அமைப்பர். தற்போது இக்குடும்பத்திலுள்ள இருபதுபேர் இந்தஅலுவலைச் செய்கின்றனர். இவ்வாறு தொன்றுதொட்டு நடைபெற்றுவருகின்றது. தங்களது குடும்பதொழிலைத் தொடர்ந்துசெய்வதில அவர்கள் ஒருஅலாதியானபெருமை காணுகின்றார்கள்.

பசசெல்லி என்றுஅழைக்கப்பெற்ற இன்றையபாப்பரசர் 12-ம பத்திநாதரின்குடும்பம் வத்திக்கானிலே பணியாற்றிவரும் குடும்பங்களுக்கெல்லாம் ஓர்எடுத்துக்காட்டாகும். கடந்த இருநூற்றாண்டுகளாக இக்குடும்பத்தினர் திருச்சபைக்காக உழைத்து வந்திருக்கின்றனர். நமது பாப்பரசரின் தந்தையார வத்திக்கான்நியாயவாதிகளின் தலைவராவர் சிஸ்ரைன் சிற்றாலயத்திலே கருதினல்மார்கள் ஒன்றுகூடிப் பச்செல்லி குடும்பத்தைச்சேர்ந்த ஏயூஜினியோவைப் பாப்பரசராகத் தெரிந்தெடுக்கும்போதுமுதலாய்ப் பச்செல்லி வம்சத்தினர் குறிப்பெடுக்கும் வேலையைத் தொடர்ந்துசெய்துவந்தனர்.

வத்திக்கான்வாசிகள் நகருக்குள்ளேயே இருக்கவேண்டுமென்ற கட்டாயமில்லை. தங்கள் பிரியப்படி தொழிலையும், இருப்பிடத்தையும் தெரிந்துகொள்ளும் உரிமை அவர்களுக்குஉண்டு உழைக்கும் குடும்பத்தைசார்ந்த யுவனே, யுவதியோ வத்திக்கானுக்குவெளியே தொழில்செய்ய அவாவினல அவர்கள் இஷ்டப்படி செய்யலாம். வத்திக்கானில் அலுவல் செய்கிறவர்கள் ஓழிந்தநேரத்தில் இஷ்டம்போல் வெளியே போகலாம. ஆனல், இரவு 11-30 மணிக்குள் அங்கேதிரும்பாவிட்டால், அடுத்த நாட்காலை அதிகாரிகளிடம் நடத்திச் செல்லப்படுவர்என்ற நியதியும்உள்ளது.

அங்கு பாப்பாசரே அதிகசட்டங்களுக்குக் கட்டுப்படுகிறார். அவர் தனிமையாகவே வாழவேண்டியிருக்கிறது எந்தமனிதனும் அவருக்கு ஆலோசனைகூறவோ, அன்றேல் அவருடன் அந்நியோன்னியமாகப் பழகவோ முடியாது. அவரது வேலைத்திட்டம் கடுமையானது. அவர் 79-ம் பிராயத்திலே சுகவீனராகியும் ஒருநாளில் 18 மணிநேரம் அலுவலாற்றுகிறார். அதுவும் வாரத்தின் ஏழுநாட்களிலும். கிறெடெல்என்ற தங்கநிறப் பறவைஒன்றே அவரது கைகளில் அமர்ந்து அவருடன்விளையாடும். வத்திக்கான்தோட்டங்களில் தினமும் அவர் ஒருமணிநேரம் உலாவுகிறார். ஆயினும், அப்பொழுதும் தனிமையிலே அவசரகருமங்கள் பற்றியவேலையைச் செய்துகொண்டேயிருப்பார்.

வத்திக்கானில் குற்றச்செயல்கள் நடைபெறுவதில்லைஎனலாம். 1952-ம் ஆண்டு ஒருசிறுதிருட்டிற்காக ஒருவன் சிறைவைக்கப்பட்டான். அவனுக்குப் பின் ஒருவருமே சிறைவைக்கப்படவில்லை. சிறைச்சாலை உபயோகப்படாததால் சிலகாலமாக அது களஞ்சியசாலையாக மாற்றப்பட்டுள்ளது.

வத்திக்கான்நகரின் இயற்கைவனப்பு, அமைதி, சாந்தம், சுத்தம் ஆகியவற்றை வருணிக்கமுடியாது. சுத்தப்பகுதிஅங்கத்தினர் வீடுகளை அவ்வப்போதுகழுவிச் சுத்தப்படுத்தித் துப்புரவாக்குவர். கீழேபாதையில் ஒருதம்புதூசு காணமுடியாதவாறு காகிதத் துண்டுகள்கூட அப்புறப்படுத்தப் படுகின்றன. பன்னிருஆட்களைக் கொண்டுள்ள வத்திக்கான் நெருப்பணைக்கும் குழுவினர் கடைசிமுறையாக அங்கு நெருப்பணைக்க அழைக்கப்பட்டமை 1947-ம் ஆண்டிலாகும். வத்திக்கான் தெருக்களுக்குப் பெயர்கள்கிடையா. கட்டடங்களும இலக்கமிடப்படுவதில்லை. அதனுல், தபாற்காரரின்வேலை கடினமாகிவிடுமேயென்ற பயமில்லை. அவர்களுக்கு ஒவ்வொருவருடைய வீடும் நன்றாகத்தெரியும் மேலும், ஆட்கள் இடமமாறுவதைக் காண்பதும் துர்லபமே. பாதுகாப்புப்படைகளும் அங்குமிகக்குறைவே. ஆனல், உலகிலேயே அதிகபாதுகாப்புக்குள்ளானவர் பரிசுத்தபாப்பாசர் என்பது உலகம் அறிந்ததே.

பொறுக்குமணிகளான சுவிஸ்பாதுகாப்பாளர் நூறுபேர்உளர். அவர்கள் ஒவ்வொருவரும் ஆறடிஉயரமுள்ளவர்களாயிருக்கவேண்டும். அவர்கள் வெகு சாதுரியமாகப் பயிற்சியளிக்கப்படுகின்றனர். கண்ணைக்கவரும கறுப்பு-மஞ்சள் நிறங்களாலான அழகியஉடைகளை அணிந்திருக்கின்றனர். மேலும் பேலரைன்பாதுகாப்பாளர் என்று ஐந்நூறுபேருளர். இவர்கள் பயிற்சிபெற்ற சேனுவீரர்கள். 1,200 பொலிஸ்காரருமுளர். துப்பாக்கிக் கத்திகளைத் தாங்கியவர்களாய் இவர்கள் காட்சியளிப்பர். நகருக்குள் வருவார்போவாரின் பெயர்முதலிய காரியாதிகளைச் சோதித்தறிய ஓர்துப்பறியும்குழுவும் உள்ளது.

வத்திக்கான் வெகுகாலத்திற்குமுன் மதவிரோதிகளின் தாக்குதலுக்குப் பயந்திருந்தகாலை, பாப்பாசரின் இருப்பிடத்திலிருந்து செண் ஆஞ்சலோ கோட்டைவரை ஒருமதிற்சுவர் எழுப்பப்பட்டது. அச்சுவரினூடே குடைந்துள்ள வழிமூலம் ஆபத்தானகாலத்தில் பாப்பாசர் இரகசியமாக வெளியேற முடியும். அவ்விரகசியவழி இன்னும் இருக்கிறது. ஆனல், நமது 12-ம் பத்திநாதர் எச்சந்தர்ப்பத்திலும் அவ்வழியை உபயோகிக்கமாட்டாரென்று கூறுதல் மிகையாகாது. அவருக்கும், தப்பியோடுவதற்கும் வெகுதூரம். உலகத்திலேயே மிகச்சிறந்த அரசியல் ஞானியாயிற்றேஅவர். கூர்மையான பார்வையும், வெட்டிப்பிளக்கும் தர்க்க ஞானமும், எப்பகையையும் வீழ்த்தும் வல்லமையும உடையவர்அவர்.

பாப்பாசரின் குணநலன்களைப்பற்றிப் பேசப்புகுந்தால் பின்வரும்சம்பவத்தை மறக்கவேமுடியாது. டெஹறானிலே ரூஷியசர்வாதிகாரி யோசெவ் ஸ்ராலின் அப்போது பிரித்தானியபிரதமர் சேர் வின்ஸ்றன் சேர்ச்சிலுடன் பாப்பாசரைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்சமயம், "எத்தனை அணிகளைக் கொண்டுள்ளது பாப்பாசரின்படை?" என்று கேலியாகவினவினர் ஸ்ராலின். பாப்பாசர் வின்ஸ்றன் சேர்ச்சிலுடன் பேசியசமயம் "நமதுபடைகளைப் பரலோகத்தில் சந்திக்கலாம்என்று நமது மகன்யோசேப்பிடம் சொல்லுங்கள்" என்று பதிலிறுத்தார்.

வத்திக்கானகருக்கே பிரத்தியேகமான வானொலிநிலையமும், மின்சாரநிலையமும் உண்டு. அதற்கெனத் தனியான றெயில்வேஸ்ரேஷனும், கடைகளும், நாணயக்கடைகளும், தபால் முத்திரைகளும், கொடியும், தந்திநிலையமும் இயங்குகின்றன. (பாப்பாசர் தினமும் தந்திமூலம் அநேகருடன் பேசுகிறார். ஆனல், ஒருவரும் அவ்வாறு அவருடன் பேசமுடியாது) வத்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## நாளு சங்கதிகள்

—※—

● ஸ்கொத்லாந்திலே எடின்பேர்க் நகரில் ஐம்பதுதொன் நிலநயான கருங்கல்கொண்டு "தீவுகளின்மாதா" என்னும் நாமத்துடன் 25 அடிஉயரமான தேவதாயாரின் சுரூபம்ஒன்று செய்யப்பட்டுவருகிறது. இதனைச் செய்வதற்கென்று உலகமுழுவதிலுமிருந்தே கத்தோலிக்கரும், ஏனையோரும் பணம்உபகரித்து வருகின்றார்கள்.

● இந்தியபிரதமர் பண்டிதஜவஹர்லால நேருஅவர்களும் சென்ற கிறிஸ்மஸ் பண்டிகையினபோது, இந்தியாவிலும், பிறநாடுகளிலுமுள்ள தமதுநண்பர்களுக்கு அநேகநூற்றுக்கணக்கான கிறிஸ்மஸ்காட்டுகள் அனுப்பிவைத்தார். மார்கழி 22-ந்திகதியன்று அவரதுவாசஸ்தலத்திலே சிறியதோர் கிறிஸ்மஸ்பாட்டியும நடைபெறலாயிற்று. அதிலே அவரின்நண்பர்கள் அவருடைய பேரப்பிள்ளைகளுக்குக் கேக்குகளும், ஐஸ்கிறீமும்வழங்கிஅவர்களை மகிழ்வித்தார்கள்.

● இம்முறை கிறிஸ்மஸ்பண்டிகையன்று சோவியற்ரூஷியாவின் தலைப்பட்டணமாகிய மஸ்கோநகரிலுள்ள றோமான் கத்தோலிக்ககோவிலுக்கு அநேகபக்தர்கள் வழிபாடுநடத்தச் சென்றார்களென்றும, அன்றுதினம் கிறிஸ்மஸ்பண்டிகை ஆராதனைகள் நடைபெற்றதாகச் சோவியற்ரூஷியாவின் அநேகபகுதிகளிலிருந்து அறிவிக்கப்பட்டிருக்கிறதென்றும் சோவியற் செய்திஸ்தாபனம் மஸ்கோவிலிருந்து செய்திபரப்பியது.

● ரூஷியசோவியற்அரசு இவ்வருடத்திலே தன்னுடைய பாதுகாப்புச் செலவை நூற்றுக்குப் 10 விகிதம்வரையிலே குறைக்கவிருக்கின்றதாம். 1956-ம் ஆண்டுக்கான அதன்பாதுகாப்புச் செலவு மதிப்பு 10,250 கோடிறூபின் நாணயமாகும். சென்றவருடத்திலே அதன் பாதுகாப்புச்செலவு 11,212 கோடியே 20 லட்சம்றூபிள்.

● ஜப்பானியதேசத்தின் சரித்திரத்தில் முதன்முறையாக அத்தேச ஹிறோஹிறசக்கிரவர்த்தி சென்ற மார்கழிமாதம் 21-ந்திகதியன்று சாதாரண சினிமாப்பட மண்டபஞ்சென்று பொதுமக்களுடன்சேர்ந்து படக்காட்சி பார்க்கலாயினர். அவர் இராசகுடும்பத்தைச்சேர்ந்த மற்றும்மூவருடன் சென்று தருமார்த்தமாகக் காண்பிக்கப்பட்ட "சினொர்மாஹொவிடே" எனும் படக்காட்சியைப்பார்க்கலாயினர்.

● 118 அடி நீளமான பாரியபிரயாணவிமானங்களைக் கட்டுவதற்குப் பிரித்தானி திட்டமிட்டிருக்கிறது. அமெரிக்கா சமீபத்திலே கட்டியிருப்பதாகத் தெரிவித்த "லொக்ஹீட்" விமானங்களைக்காட்டிலும் இவைகள் மிகப்பெரியனவும், அதிகம்தீவிரவேகமுடையனவுமாய் இருக்குமாம். இவைகள் 105பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு மணித்தியாலம் 425 மைல் வேகத்தில் செல்லக்கூடியனவாகும்.

● ஐரோப்பாவிலேயே மகாஉன்னதமானதென்று நம்பப்படுவதாய் மிலான் நகரிலே வானளாவிய தாய்க் கட்டியெழுப்பப்பட்டுள்ள மகாஉயரமான மேல்மாடிக்கட்டடத்திலே, அங்கர்அதிமேற்றிராசனக் கோவிலிலுள்ள தேவதாயாரது சுரூபத்தின் பிரதிரூபமான வெண்கலச்சுரூபம்ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதனை ஸ்தாபிக்கும் திருவைபவத்திற்கு இத்தாலியஜனாதிபதியான சிஞ்ஞோர் குறொஞ்சிஅவர்களும் சமூகமளித்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாப்பரசரும் கிறிஸ்மஸ்வாழ்த்துகளும்

இம்முறை பரிசுத்தபாப்பரசருக்குக் கிறிஸ்மஸ்வாழ்ச் சோபனசெய்திகளும், அன்பளிப்புப் பார்சல்களும் உலகமுழுவதிலுமிருந்து..சென்ற மார்கழிமாதம் 18-ந் திகதிமுதலே வத்திக்கான் தபாற்கந்தோரிற்போய்ச் சரியத்தொடங்கியதாக வத்திக்கான்செய்தி தெரிவித்திருக்கின்றது. கேக்குகள், வைன்போன்ற உணவுப் பொருட்களையே அதிகமாகக்கொண்ட இந்த அன்பளிப்புகள் விசேஷமாய்ச் "சீவந்தராயுள்ள மரித்தவர்க"ளுக்கே — அதாவது தங்கள் மடங்களின் சுவர்களுக்குள்ளே உலகத்திலிருந்து சதாதாழிட்டு அடைக்கப்பட்டு மறைந்த சீவியம் நடத்திவருகின்ற கன்னியாஸ்திரிமாருக்கே கொடுக்கப்படவேண்டுமெனப் பாப்பரசர் ஆஞ்ஞாபித்தார். நிற்க, பாப்பரசர் சென்ற மார்கழி 24-ந் திகதியன்று வத்திக்கான்மாளிகையிலுள்ள தமது பிரத்தியேக அறையின் சன்னலண்டை காட்சியளித்தபோது, இத்தாலியர்களும், பிறநாடுகளைச்சேர்ந்தவர்களுமான 50 000 பேருக்கு மேற்பட்ட யாத்திரிகர்கள் பெருமுழக்கஞ்செய்து தங்கள் கிறிஸ்மஸ் வாழ்த்துகளை அவருக்குச் சமர்ப்பித்தார்கள். வெண்மையான அங்கிதரித்து மொய்மையான உருவத்துடன் காட்சியளித்த 79 வயதுடையவரான பாப்பரசர் மூன்றுநிமிஷநேரம் அந்தப்பெருஞ் சனக்குழாமுக்கு மேலாகநின்று அவர்களின் வாழ்த்தொலிக்குப் பிரதியாகத் தமது கரங்களைஉயர்த்தி அவர்களை வாழ்த்திநின்றார். பின்னர் வெள்ளியாற்செய்த ஒலிபெருக்கிமூலம் அவர் தமதுசுருந்த பிரியாவிடையாகக் கைகளைஉயர்த்தியபோது, அங்குநின்ற ஆயிரக்கணக்கான கார்களின் ஹோண்களும், உல்லாசப்பிரயாணிகளின் ரதங்களும் குதூகலம் மிகுந்த வாழ்த்தொலி செய்தன.

## பரிசுத்தநாட்டின் புதியகாப்பாளர்

ஓர் இத்தாலியபிரான்சீஸ்கன் சபைக குருவானவரான வண. ஆஞ்ஜெலிகோ லசெறிசுவாமியார் பரிசுத்தநாட்டின் பாதுகாப்பாளராக நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார். இந்தப் பதவியை வகிக்கும் 24-வதுகுருவானவர் இவர். பாரம்பரியமாக இந்தப்பதவி பிரான்சீஸ்கன் சபையாருக்கே உரியதாகும். பரிசுத்தநாட்டின் பாதுகாப்பாளர் என்றமட்டிலே வண. லசெறி சுவாமியார் பலஸ்தீன்நாட்டிலுள்ள திருஸ்தலங்கள் எல்லாவற்றிலுமுள்ள கத்தோலிக்க உரிமைகளைப் பாதுகாக்கவேண்டிய பரிசுத்தஸ்தானத்தின் அதிகாரபூர்வமான பிரதிநிதியாவர். அதனல்இவர் தமதுஅதிகாரத்தின்கீழ் 400 பிரான்சீஸ்கன் சபைக் குருமார், பிறதர்மாரைக் கொண்டிருப்பார். இவர்கள் அங்கே தங்கள்பரிபாலனத்தில் 68 திருசேத்திரங்கள், மற்றும் சந்நியாச ஆச்சிரமங்களையும், 85 விசாரணைப் பங்குகளையும், 29 கலாசாலைகளையும், 5 கல்லூரிகளையும், 3 அநாத சாலைகளையும் கொண்டிருக்கிறார்கள்.

# பாப்பரசரின், 80-வது பிறந்தபெருநாள்

வருகிற பங்குனிமாதம் பரிசுத்தபாப்பரசரின் 80-வது வருடப் பிறந்தபெருநாள் வருகின்றது. இதனைச்சிறப்பாகக் கொண்டாடுதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கருதினல்மார் திருச்சங்க தலைவரான கருதினல் திசரான் ஆண்டவர்தலைமையிலே ஓர்கம்மிஷன் சமீபத்தில் ஆக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. 1942-ம் ஆண்டு பரிசுத்தபிதாவின் மேற்றிராணித்துவ வெள்ளியூபிலி வந்தபோதும் அதனைக் கொண்டாடுமுகமாக அப்போதிருந்த கருதினல்மார் திருச்சங்கதலைவரான கருதினல்பிஞ்ஞாத்தெல்லி திபெல்மோந்தே ஆண்டவர் தலைமையில் அப்போதும் ஓர்கம்மிஷன் ஆக்கப்படலாயிற்று. தமது பிறந்தபெருநாள் கொண்டாட்டம் ஆத்மீகபணிகள் செய்வதோடும், வறியவர்கள், பிணியாளர்களுக்கு உதவிசெய்வதோடும் நின்றுவிடவேண்டுமெனப் பாப்பரசர்ஆசிப்பதாகத்தெரியவருகிறது. முந்தத் தமதுபிறந்த பெருநாளன்றும், பிந்தத் தாம் திருமுடிசூடிய வருடாந்த நாளாகிய பங்குனிமாதம் 12-ந் திகதியன்றும் ஓர்வேளை சம்பேதுருவானவர் மகாலயத்தில் அவர் தேவதோத்திரபூசைப்பலிநிறைவேற்றுவார். அவரது பிறந்த பெருநாளும், பாப்பரசராக அவர் தெரியப்பெற்ற பதினேழாவது வருடாந்தநாளும் வருகிற பங்குனிமாதம் 2-ந்திகதிவருகின்றன. மேலும் இவ்வருடத்திலே அவர் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்ற 57 வருட நிறைவுதினம் சித்திரை 2-ந்திகதியன்றும், அவர் மேற்றிராணித்துவஅபிஷேகஞ் செய்யப்பெற்ற 39-வது வருட நிறைவு தினம் வைகாசிமாதம் 13-ந்திகதியன்றும் வருகின்றன.

# கத்தோலிக்க சமாச்சாரம்

## அச்சுப்பிரசுர அப்போஸ்தலர்

கத்தோலிக்க பத்திரிகைகளையும், மற்றுஞ் சஞ்சிகைகளையும் விற்பனை செய்வதிலே அதிகமானநேரத்தையும், சத்துவத்தையும் தியாகஞ்செய்து கடுமையாகஉழைத்துவருகின்றஅநேக "கத்தோலிக்க அச்சுப்பிரசுர அப்போஸ்தலர்கள்" பிரித்தானியதேசமுழுவதிலும் இருந்துவருகின்றார்கள். இவர்களில் ஹெப்பேண்பட்டின வாசியான செலவிமார்கறெற் மாஜிஅம்மையாரும் ஒருவராகத்திகழ்கின்றார். இவர் அப்பட்டினத்திலே அர்ச். அலோஷியஸ் விசாரணைப்பங்கில கத்தோலிக்கபத்திரிகைகள் விற்கும் பொறுப்பை 1937-ம் ஆண்டுகையேற்ருர். அப்போது அப்பங்கைச்சேர்ந்த 5,000 கத்தோலிக்கர்மத்தியிலும் ஏறக்குறைய அறுபது பத்திரிகைகளே விற்கப்பட்டன. ஆனல், இன்றோ அப்பங்கைச்சேர்ந்த 6,350 கத்தோலிக்கர் மத்தியிலும் வாரந்தோறும் 1,129 பத்திரிகைகளும், மற்றும் கத்தோலிக்க சஞ்சிகைகளும் விற்கப்படுகின்றன. தனிப்பட்ட வேறெந்த ஓர் விசாரணைப்பங்கிலும் இத்துணைபெருந்தொகையான கத்தோலிக்கபத்திரிகைகள் விலைப்படுவதில்லை. 18வருடகாலமாக இந்தவேததொண்டில் ஈடுபட்டுத் தற்போது 68 வயதுடையவரான இந்த அம்மையார் அவ்விசாரணைப்பங்கு முழுவதும் சென்று விசாரணைசெய்தும், வீட்டுக்குவீடு பத்திரிகைகளைக் கொண்டுபோய்விற்றும் இவ்விதம் சித்தியடையலாயினர். பத்திரிகைவிற்பனவையிட்டு அவ்விசாரணைப்பங்கு தற்போது 41 பகுதிகளாக வகுக்கப்பட்டு, அந்தந்தப்பகுதியிலே குறிக்கப்பட்டவர்கள்சென்று பத்திரிகைகளை விற்றுவருகின்றார்கள்.

## ஆசா. யோசேவாஸ்முனிவர்

கோவாவில்பிறந்தவரும், இற்றைக்கு 250 வருடங்களுக்குமுன் இலங்கையில் ஓர்மிஷனரியாகத் தொண்டாற்றிய வருமான ஆசா. யோசேவாஸ் குருமுனிவருக்கு விரைவிலே முத்திபேறு பெற்றபட்டம் அருளுமாறுகேட்டுப் போர்த்துக்கேய இந்தியாவில்வாழும் 93,000 பேருக்கு மேற்பட்ட கத்தோலிக்கமக்கள் கைச்சாத்திட்ட மனுப்பத்திரமொன்று பாப்பரசருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது. இதற்குமுன் 62,000 இலங்கைக் கத்தோலிக்கமக்களும், இந்தியா, பாகிஸ்தான், இலங்கைஎனும் நாடுகளிலுள்ள 80 குருசிரேஷ்டர்களும கைச்சாத்திட்ட மற்றோர்விண்ணப்பமும் சிலகாலத்துக்குமுன் பரிசுத்த பிதாவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## ஆசீர்வாதப்பரின் திருஎன்புகள்

அர்ச். ஆசீர்வாதப்பரின் திரு என்புகள் கி. பி. 529-ம் ஆண்டு அடியிடப்பட்ட மொண்ரேகஸினே ஆச்சிரமத்திற்குத் திரும்பவும் கொண்டுபோகப்பெற்று, அங்கே முன்னர் அது இருந்த பெரியபலிபீடத்தின் கீழ் மீளவும் சேமித்து வைக்கப்பட்டிருக்கின்றன. இத்திருஎன்புகளும், அவர் சகோதரியான அர்ச். ஸ்கொலாஸ்திக்கா அம்மாளின் திருஎன்புகளும் சென்றமகாயுத்தத்திலே நேசபடைகள்வீசிய வெடிகுண்டுகளாலும், பீரங்கிக்குண்டுகளாலும் ஆச்சிரமம்பாழாக்கப்பட்டபோது, சேதமுறுமல் தேவாதீனமாகக் காப்பாற்றப்படலாயின.

## ஏழாவது துணைமேற்றிராணியார்

நியூயோக்நகர் அதிமேற்றிராணியாராய் விளங்கும் கருதினல்யோசெவ் ஸ்பெல்மன் ஆண்டவர் தமது தேவதொண்டுகளிலே தமக்குத் துணைபுரியுமாறு தற்சமையம் ஏழு துணைமேற்றிராணிமாரை—அதாவது உலகிலுள்ள எந்தஒரு அதிமேற்றிராணியாரும் கொண்டிராத மிகப் பெருந்தொகையான துணைமேற்றிராணிமாரைக் கொண்டிருக்கின்றார். இவர்களிலே சமீபத்தில் நியமனஞ் செய்யப்பெற்ற ஏழாவதான துணைமேற்றிராணியார் அங்கு மன்ஹற்றன் நகர் அர்ச். தோமஸ்மோரின் விசாரணைப்பங்குக்குரவரும், நியூயோக் நகர சின்னக் குருமடத்தின் முன்னைநாள் அதிபருமான 63 வயதுடைய வண. பிலிப் பெர்லோங்சுவாமிகளே.

## திருச்சபையும் இஸ்ருயேல்அரசும்

யூத-அராபியயுத்தம் நிகழ்ந்த காலத்திலே உண்டுபண்ணிய சேதங்களுக்கும், அபகரித்துக் கொண்ட சொத்துகளுக்கும் நஷ்டபரிகாரஞ் செய்யவேண்டுமென்று கத்தோலிக்க திருச்சபை யூதஅரசாங்கமாகிய இஸ்ருயேல்அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டது. சமீபத்திலே இஸ்ருயேல்அரசாங்கம் இன்னதென்றுவெளிவராத ஓர் தொகையைக்கொடுத்துத் திருச்சபையுடன் சமாதானமாகச் சகலத்தையும் தீர்த்துக்கொண்டதாக ஜெருசலேமிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஓர்பகுதியாகத் தனக்குத்தேவையென்று திருச்சபை கேட்டிருந்த சில இடங்களை அது திரும்பக்கொடுத்திருக்கின்றது. இவ்வாறுசமாதானமாக எல்லாம் தீர்க்கப்பட்டதையிட்டு வண. அன்ரோனியோ வெர்கானி எனும் குருசிரேஷ்டர் ஜெருசலேமில் திருப்தி தெரிவித்து, எல்லாவற்றையும் தீவிரமாகச் செய்துமுடித்ததற்காக இஸ்ருயேலின் சமயவிவகாரமந்திரியாருக்கு நன்றிதெரிவித்திருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தைமாதம்

**பொதுக் கருத்து:** மெய்யான திருச்சபையைத் தேடுகிறவர்கள் பாப்பானவரின் தலைமையே திருச்சபையின் ஐக்கியத்திற்கு அத்திபாரம்என்பதைக் கண்டுணரும்படியாக வேண்டிக்கொள்வது.

**மிஷன் கருத்து:** சீனக்கத்தோலிக்கமக்கள் தங்களுள் ஒற்றுமையாய், திருச்சபையோடு இணைபிரியாதவிதமாய்ச் சேர்ந்திருக்கும்படியாக மன்ருடிக் கொள்வது.

---


சத்தியவேத
# பாதுகாவலன்

1956-ம் ஆண்டு
தைமாதம் 5-ந் திகதி


---

## 1956-ம் ஆண்டு

பெருங்கருணைத் தடங்கடலாகிய எம்பெருமானின் திருவருளால் நாம் 1956-ம் ஆண்டெனும் நாமத்துடனே உதயமாகியிருக்கும் மற்றுமோர் புத்தாண்டைக்காணும் ஆசீர்வாதத்தைப் பெற்றிருக்கின்ருேம். அதனுல், மிக்க அகமகிழ்ச்சியுடையராய் இதனையும் நாம்காணத் திருவுளங்கனிந்த அனந்த தயாநிதியான அவரது திருப்பாதகமலங்களை மனப்பூர்வமாக வணங்கித் துதிக்கின்ருேம். அவர் மேலும் நமக்குச் சீவியத்தையருளச் சித்தங்கொண்டதற்காக அவர்பால் நாம் மிக்கான அன்பும், நன்றியுமுடையோராயிருப்பது நம்மேற் சுமந்த பெருங்கடனுகும். அவர் நமக்குச்சீவியத்தை அருளுவதெல்லாம், அதைக்கொண்டு—இம்மைச் சீவியத்தைக்கொண்டு மறுமைப் பேரின்பசீவியத்தை ஈட்டிக் கொள்வதற்கேயாகும். அதனுல், இப்புத்தாண்டையும் இதே நோக்கமாக உத்தமமேரையாய்ப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அவர்திருவருளையும், ஆசீர்வாதத்தையும் இரந்துகொள்ளுகின்ருேம்.

நிற்க, நம்முடைய சத்தியசற்சமயத்தின் பாதுகாவலன் எனும் அழகியநாமம்புனைந்த தாய்ப் பொதுவாகத் தமிழுலகிற்கும், சிறப்பாகக் கத்தோலிக்க தமிழுலகிற்கும் கடந்த 80 ஆண்டுகளாக அரும்பணியாற்றி வந்திருக்கின்ற நமது "சத்தியவேத பாதுகாவலன்" பத்திரிகையானது இந்தப்புத்தாண்டுடன் தனது 81-வதுபுதுமலரின் முதலாவதுஇதழை அலரச்செய்து வெளிவரப்போகும் இச்சுபசந்தர்ப்பத்திலே இதனை ஆதரித்து வருகின்ற அபிமானிகளுக்கும், இதன் அபிவிர்த்தியிலே எஞ்ஞான்றும் கருத்தாயிருந்து தங்கள் அருமையானகட்டுரைகள், இனிமையானகவிதைகள், மற்றும்விஷயதானங்களாலே இதனைப் பரிமளிக்கச் செய்துவருகின்ற குரவர்கட்கும், ஆசிரியர்கட்கும், நிருபர்கட்கும் இப்புதிய ஆண்டிலும் சமாதானமும், சுபீட்சமும், சர்வபாக்கியமும், சகலவித அனுகூலங்களும் உண்டாகும்படியாகச் சர்வாதிகர்த்தரைப் பணிவாகஇரந்து, சகலர்க்கும் புதுவருட சோபன வாழ்த்துகள் சமர்ப்பித்து, இந்த 81-வதுமலரையும் அலரச்செய்யுமாறு நம் தூவலைக் கையிலெடுக்கின்ருேம்.

இப்போதுநாம் புத்தாண்டின் வாயிற்படியிலேதான் நிற்கின்ருேம். ஆகவே, நாம் இவ்வாண்டில் உலகில்என்னஎன்ன சம்பவங்கள் நிகழுமென்று இச்சந்தர்ப்பத்திலே முன்னதாக அறிந்துசொல்லும் ஆற்றல் உடையேயமல்லேம். ஆனல், எதிர்பார்க்கும் சம்பவங்களை வைதிகவிஷயமாய் ஆராயுங்கால், கிறீஸ்துநாதரின் பதிலாளியாய், சத்தியதிருமறையின் தலைவராய்த்திகழ்ந்து இன்று அகிலமுழுவதையுமே பிரமிக்கச்செய்துவருகின்ற பரிசுத்த பிதா 12-ம்பத்திநாத பாப்பரசரின் 80 வது பிறந்தபெருநாள் இவ்வாண்டு பங்குனி 2-ந்திகதியன்றுவருவதும், யேசுசபை ஸ்தாபகரான அர்ச். லொயலா இஞ்ஞாசியார் பரமபதமடைந்த 4-ம்நூற்றாண்டு நிறைவு தினம் ஆடி 31-ந்திகதியன்றுவருவதும், இந்தியாவிலே வேதபோதக தொண்டில் அர்ச். பிரான்சீஸ் சவேரியாருக்கு அடுத்தபடியாக மதித்துக் கொண்டாடப்பட்டு வருகிறவரான தத்துவபோதகர் வண. ரூபேட் தே நொபிலி சுவாமிகள் இறைவனடிசேர்ந்த 3-ம்நூற்றாண்டு நிறைவு தினம் நிகழும்தைமாதம் 16-ந் திகதியன்று வருவதும் விசேஷப்பட்டனவாகும்.

லௌகிகவிஷயமாக ஆராயுங்கால், இலங்கையிலே பெருங்கலவரத்துக்கிடமாய் இருந்துவருகின்ற மொழிப்பிரச்சினை வருகிறமாசிமாதத்தில் கூடவிருக்கின்ற ஐக்கியதேசீயகட்சி மகாநாட்டில் முடிவுசெய்யப்படவிருப்பதும், பாராளுமன்ற சனப்பிரதிநிதிகள் சபைப் பொதுத்தேர்தல் நடக்குமென்ற உத்தேசத்தாலே பல்வேறுகட்சிகளும் அதற்குத் தயாராகிக் கொண்டுவருவதும், உலகின்பல நாடுகள் கலந்துகொள்ளவிருக்கும் கொழும்புத்திட்டப் பொருட்காட்சி கொழும்பிலே பிரஸ்தாபமாக நடைபெறவிருப்பதும், ஐக்கியஅமெரிக்க தேசத்திலே புதியஜனதிபதித்தேர்தல் நடந்தேறவிருப்பதும் விசேஷப்பட்டசிலவாகும்.

இறைவன் தமது கருணைமடைதிறந்து, பஞ்சம், படை, கொள்ளைநோய், உள்நாட்டுக்கலகம், வேதகலாபனை, நாஸ்திகம் ஆதியவற்றிலிருந்துஉலகத்தைத்தற்காத்து, அரசுகள், சனசாகியங்கள்மத்தியிலே சமாதானம்நிலவச்செய்து நமது சத்தியசற்சமயம் மேன்மேலும்தழைத்தோங்கச்செய்து, மக்களெல்லாம் ஆன்ம, சரீர சேமலாபமுற்றுவாழத் திருவருள்பாலிப்பாராக!

---

## குருத்துவ வெள்ளியூபிலி

யாழ்ப்பாண மேற்றிராசனத்திலே தேவதொண்டாற்றி வருகின்றகுருப்பிரசாதிகளில் வண. ஏ. எஸ். சிங்கராயர் சுவாமியவர்கள் இவ்வாண்டு மாசி 2-ந்திகதியன்றும், வண. ஏ. சியெர்ப்கா சுவாமியவர்கள் ஆனி 17-ந்திகதியன்றும், வண. ஈ. பொமிக்கோ சுவாமியவர்கள் ஆடி 2-ந் திகதியன்றும், வண. எஸ். டேவிட் சுவாமியவர்களும், வண. எஸ். வேந்தர்கோன் சுவாமியவர்களும் மார்கழி 19-ந்திகதியன்றும், வண. எல். ஏ. சிங்கராயர்சுவாமியவர்கள் மார்கழி 21-ந்திகதியன்றும் தங்கள்குருத்துவ வெள்ளியூபிலியைக் கண்டுகளிக்க விருக்கிருர்களென்னும் சுபசெய்தியானது பலருக்குமே மகிழ்ச்சி தரும் மங்கலசெய்தியாகும்.

---



## சதாசகாயமாதா கோணம்

### அதிசய ஆரோக்கியம்

மரணத்தின் கபாடத்திலிருந்து என்னைவிடுவித்து, என்நோயை அதிசயவிதமாகக் குணப்படுத்திய சதாசகாய மாதாவே! என்நன்றியறிதலை இதோ பகிரங்கமாய் அறிக்கையிடுகிறேன்.

நான் கடந்த மூன்றுமாதங்களாக என்வீட்டிலேயே நோயுற்றிருந்தேன். என்னுடையவியாதி இன்னதென்று டக்றர்மாரால் சரியாகக்கண்டுபிடிக்க முடியாதிருந்தது. ஆவணிமாதம் 25-ந்திகதி நீரிழிவுச்சன்னி என்னைப்பீடிக்கவே கொழும்புப் பெரியஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப் பட்டேன். என் நிலைமை ஆபத்துக்குரியதெனக்கூறி, நான்சுகமடைவது முடியாதகாரியமென்று என்னைப்பரிசோதித்த டக்றர்மார் முடிவுகட்டிவிட்டார்கள்.

என்னைப்பரிசோதித்த டக்றர்மார் உரித்ததேங்காய்ப் பருமனுன இரண்டு கட்டிகள் இருக்கக்கண்டார்கள். சத்திரவைத்தியம் (Operation) செய்யவேண்டியது அத்தியாவசியமாகக் காணப்பட்டாலும், எனதுகேவலமும், பலவீனமுமானநிலைமையில் அதைச் செய்ய அவர்கள்ஒருப்படவில்லை. நான் நீரிழிவுநோய் கண்டிருந்தமையால் நல்விரத்தஞ் செலுத்தவும் முடியாதிருந்தது.

ஆவணிமாதம் 27-ந்திகதியன்று எனது சரீரசுகநிலை மிகமோசமாகக் காணப்பட்டது. என் ஆன்மலாபத்தைக் கருதிக் குருவானவரை என்படுக்கையண்டை கொண்டுவந்துவிட்டார்கள். என்னைப் பராமரித்துவந்த பூலோகசம்மனசுகள்என அழைக்கப்படும் ஆஸ்பத்திரிச்சிஸ்றர்மார் (கன்னிகா இரத்தினங்கள்) நான்மரணத்தறுவாயில் இருப்பதாகவும், என் ஆண்டவரோடு நான் சமாதானமாக ஆயத்தப்படுத்திக் கொள்ளும்படியும் அன்புமேற்கொண்ட அரிய ஆலோசனை கூறினுர்கள். என்கட்டிலண்டை கலங்கிநின்ற என்சகோதரிகள்இருவர் என்கடைசித்தஞ்சம் சதாசகாய மாதாதான்என்ற பூரணநம்பிக்கையுடன் நேர்த்திசெய்து கொண்டார்கள்.

புரட்டாதிமாதம் 3-ந்திகதி — அதாவது நோவனைதொடங்கிய 8-ம்நாள் எனக்குச் சற்றே சுகங்கிடைத்தது போல உணர்ந்தேன். நீரிழிவுச்சன்னி என்னைவிட்டு மாயமாய் மறைந்தது. ஆஸ்பத்திரிக்கன்னிகையாம் சகோதரி என்வியாதி குணமடையக்கூடிய அறிகுறிகள்உண்டென்றும், பூரண சுகங்கிடைப்பது சகசம்என்றும் தென்பாகக் கூறினுர்.

புரட்டாதிமாதம் 18-ந்திகதியன்று சத்திரவைத்தியம் செய்யப்படுவதற்கு நான் தகுந்தநிலைமையில் இருக்கிறேனேவென்று அறியும்பொருட்டு டக்றர்மார் திரும்பவும்என்னைப் பரிசோதித்தார்கள். அப்போது ஒருகட்டி இருந்த இடமுந்தெரியாது மறைந்துவிட்டது என்றும், மற்றது வெகுவாய்ச்சிறுத்துவிட்டதென்றும் கண்டார்கள். இந்த மாற்றம் எவ்வாறு நடைபெற்றிருக்கலாமென்று தங்களுக்குள்ளேயே அதிசயிக்கவும், யோசிக்கவும் தொடங்கினுர்கள்.

அடுத்தநாள் புரட்டாதிமாதம் 19-ந்திகதி சத்திரவைத்தியம் தேவையில்லையென்றும், நான் வீட்டுக்குப்போகலாமென்றும், ஆனல், எனதுசாப்பாட்டு விஷயமாக விசேஷகவனம் எடுக்க வேண்டும்என்றும் டக்றர்மார் சொன்னுர்கள். புரட்டாதிமாதம் 22-ந்திகதி நான் ஆஸ்பத்திரியைவிட்டு வீடுசென்றேன்.

இதுமெய்யாகவே ஒருபுதுமை. இப்புதுமை நடைபெருவிட்டால் இன்று நான் உயிரோடிருக்க மாட்டேன்என்பது நிச்சயம். சதாசகாயமாதாவே! உமக்கு எனது ஆழ்ந்த நன்றித்துதியைச் செலுத்துகிறேன். சதாசகாயமாதாவே! உமக்குப்புகழ்ச்சி உண்டாவதாக.

(சலாபம், சந்தியோகுமையோர் வீதியில்வதியும் விவி எஸ். லோறென்ஸ்என்பவர் "நோவனைப்புதினம்"எனும் ஆங்கிலபத்திரிகைக்கு அனுப்பியுள்ள கடிதத்தின் தமிழ்ச்சாரம் இதுவென்க.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் ஜே. வி. குணரத்தினம், B.A. அவர்களின்

# தேகவியோகம்

யாழ்ப்பாண மத்தியகல்லூரிப் போசிரியர்களில் ஒருவராய்விளங்கிப் பலராலும்நனகறியப் பெற்றிருந்தவரான திரு. ஜே. வி. குணரத்தினம், B. A. அவர்கள் காத்திராப்பிரகாரம் சென்ற 31-ந்திகதி சனிக்கிழமைஇரவு காலஞ்செல்லலாயினரெனும் துயரசெய்தியை அறியவந்து பெரிதும்மனம் வருந்தலானோம். மரிக்கும்போது இவருக்குவயது 63. ஆசிரியர் ஜோண் வேலுப்பிள்ளை குணரத்தினம்அவர்கள் யாழ்ப்பாணத்திலே "அமெரிக்கன் மிஷன்" என அறியப்படுகின்ற புரொட்டஸ்தாந்தசபைப் பிரபலபோதகர்களில் ஒருவராய், பெரியகல்விமானாயிருந்து காலஞ்சென்ற கனம். சி. டி. வேலுப்பிள்ளைப்போதகரின் புதல்வர். இவர் வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்விபயின்றார். பிந்த B. A. பரீட்சையில் அரங்கேறினார். அதன் மேல் யாழ்ப்பாண மத்தியகல்லூரிப் போசிரியருள் ஒருவராயிருந்துவந்து சிலவருடங்களின்முன் இளைப்பாறினார். இவர் வண்ணார்பண்ணை, இல்னர் கல்லூரிஅதிபராயிருந்தவரும், பிரசித்தி பெற்ற "எட்வாட்ஸ்தமிழ் கணித" நூல்களின் ஆசிரியருமான திரு. எஸ். ஏ. எட்வேட், B. A., L. T., அவர்களின் சிரேஷ்டபுதல்வியை விவாகஞ் செய்திருந்தார். இவருக்கு இருபுத்திரிகள்உள்ளனர். இவர்களில் ஓர் B. A. பட்டதாரியான மூத்தபுதல்வி கொழும்பிலே பம்பலப்பிட்டி, திருக்குடும்ப கன்னிகாமடத்து மகளிர்கல்லூரியில் ஓர் ஆசிரியையாயிருந்து, தமதுதந்தையார் காலஞ்செல்வதற்கு முந்தினங்களின்முன்னரே குண்டசாலையிலுள்ள அரசாங்க கமத்தொழிற் கல்லூரிப் போதகாசிரியரும், யாழ்ப்பாண அரசினர்ஆஸ்பத்திரிச் சத்திரவைத்தியரான டக்றர்யோசெவ் அவர்களின் சகோதாருமான திரு. ஆர். யோசெவ் அவர்களை மணஞ்செய்துகொண்டார். மற்றப் புதல்வி திருச்சினாப்பள்ளியிலுள்ள திருச்சிலுவைக் கல்லூரியிலே பி. ஏ. பரீட்சைக்குப் படித்துவருகின்றார்.

இற்றை, ஆசிரியர்குணரத்தினம்அவர்கள் புரொட்டஸ்தாந்த சமயத்திலிருந்து மனந்திரும்பிக் கத்தோலிக்க சமயத்தில் சேர்ந்துகொண்டசம்பவம் மிகவும்அந்தரங்கமானது. இவர் சில வருடகாலமாகப் பலமுறைகளிலும் நமதுஆசனக்கோவிலிலே நெடுமுழந்தாளிலிருந்து செபமாலைசொல்வதையும் செபஞ்செய்வதையும் நாம் அவதானித்து வந்தபோதிலும் இவர் ஓர் புரொட்டஸ்தாந்த கிறீஸ்துவர் என்பதை நாம் உணராதிருக்கவில்லை. இவர் தமதுமாமனாரின் "எட்வாட்ஸ் தமிழ்க்கணித" நூல்களை நமது அச்சகத்தில் நெடுங்காலமாகப் புதிய திருத்தங்களுடன் தொடர்ந்து அச்சிட்டுவந்து நம்முடன் நெருக்கமாகப் புழங்கிவந்தபோதிலும் அவரது சமயநிலையைப்பற்றி ஆராய்வதற்கு நாம் மனமேவப் பட்டோமில்லை. ஆனால், இவர் தமதுகழுத்தில் உத்தரியவாவணிக்கம் அணிந்திருந்ததை மாத்திரம் நாம் அவதானித்தோம். அங்ஙனமாக, இவர்இறைக்கு ஆறுமாதங்களின்முன் தனிமையாக மருதமடுத் திருப்பதிசென்று அங்கே ஞானஸ்நானம்பெற்றுக் கத்தோலிக்கதிருமறையில் சேர்ந்துகொண்டாரென்பதைச் சமீபத்திலேயே அறிந்துகொள்ளலானோம். சென்றமார்கழி ஆரம்பத்திலே இவர் மருதமடுத்திருப்பதிக்கு மற்றுமோர்தரம் யாத்திரைசெய்து திரும்பியதாக அவரேதெரிவித்தார். ஆசிரியர் அவர்கள் எதிர்பாராதவிதமாகக் கடினநோய்கண்டு ஆஸ்பத்திரியில் இருந்துவரும்போது அந்தியதேவதிரவிய அனுமானங்களைப்பெற்று அமைதியாக மரணத்திரையில் மறைந்தார். இவரின் பிரேதமானது புதுவருடப்பிறப்பன்று பிற்பகல் 5-30 மணிக்கு இனசனரும், அன்பர்களும் பலகார்களில் புடைசூழ்ந்துவர, அவர் இல்லத்திலிருந்து சென்மாட்டீன் குருமடத்தின் முன் வீதியை அடைந்ததும் புரொக்கியூறேற்றரான அதிவண. என். யோசெவ் சுவாமியவர்கள் தலைமையிலே பலகுருமார் துக்கசங்கீதம் பாடிச் செல்ல, பெருந்திரளான கத்தோலிக்கர் செபஞ் செய்துமுன்செல்ல ஊர்வலமாக ஆசனக்கோவில் கொண்டுசென்று அங்கு நிறைவேறிய அந்திமதிருச்சடங்கின் பின் முன்சொன்ன மேரையாய்ச் சேமக்காலைகொண்டுசென்று அடக்கஞ்செய்யப் படலாயிற்று. இவரை இழந்து துன்புறும் பாரியார், பிள்ளைகள், மற்றுமுள்ள இனசனருடன் நாமும் அனுதாபப்படுகிறோம்.

**R. I. P.**

---

# புத்தாண்டில்

— எம். வி. —

எமதாவி எனுமீழ மணியான நாடு
  எழிலோடு அறமோது மிடமாக வேண்டும்
அமலோனை மறவாத வழிபாடு நாட்டில்
  அரசாள, நாஸ்திகப் படைமாள வேண்டும்
அமுதான சுகவாழ்வு நடமாட நாளும்
  அறியாமை அறியாது அன்பூற வேண்டும்
தமரோடு பிறரோடு எவரோடு மக்கள்
  தயவோடு குணமோடு உறவாட வேண்டும்

●

ஆற்றுக்கும் ஊற்றுக்கும் அருகாத நன்மை
  ஆனந்த பெருவாழ்வு வளமாக வேண்டும்
கூற்றுக் கடங்காத நிதிகூர வேண்டும்
  குறையாத கலைகளும் நிலையாக வேண்டும்
சேற்றுக்கு நிகரான பாவக் கொடூரச்
  சிதைவோடு புண்ணியச் சீர்பூக்க வேண்டும்
காற்றுக்கு மெட்டாத விடமெங்கும் எங்கள்
  "காவலன்" சேவையின் புகழெட்ட வேண்டும்

●

பொல்லாத பொய்சூது களவோடு மாய்ந்து
  புத்தாண்டு தனிஉண்மை ஒளிவீச வேண்டும்
இல்லாமை, கொலை, வாதை, இணையாதவாழ்வு,
  இன்சொல்லு, நடுநீதி இவைபேண வேண்டும்
நல்லாரு மிகவாக நந்தாத கொடையும்
  நாடார மனமார நாங்காண வேண்டும்
சொல்லால் எழுத்தினற் சொல்லொணாச் சோதிச்
  சொரூபனே! நின்னருசி மழைபோல வேண்டும்

---

❋ உலகசரித்திரத்தில் பெரியசாப்பாட்டுஇராமனாய்விளங்கிய சக்கிரவர்த்தி யார்?

ஜேர்மனிதேச ஐந்தாவது சாள்ஸ் சக்கிரவர்த்தியே. இவர் தனது சீவிய காலத்தில் தினமும் வேறுவேறான அறுபதுவகையான உணவுகளைச் சாப்பட்டுவந்தார். இந்தப் பேருண்டிக்காரர் தமது உணவுகளை ஒருகலன் பீரும், ஒருகலன் வைனுங்கொண்டு சுத்தஞ்செய்துகொண்டும் வந்தார்.

# பொதுவர்த்தமானம்

—:—

### நடிகரின் குடை 100 பவுண்

தங்கள் தொழிலிலிருந்து இளைப்பாறிய பிரான்சிய நாடக-சினிமா நடிகர்களுக்கு உதவியாகப் பரீஸ்நகரிலே சிலதினங்களின்முன் உலகின் பிரபல நாடக-சினிமா நடிகர்கள் உபயோகித்துவந்த பொருட்களின் ஏலவிற்பனை வொன்று நடந்தேறியது. அதிலே சாளிசப்ளின் எனும் பிரபலநடிகரின் குடை 100 பவுணாகவும், ரினோறெஸ்லிஎன்ற சங்கீதமேதையின் வீணை ஒன்று 150 பவுணாகவும், மோறிஸ் ஷிவாலியர்எனும் மற்றோர்நடிகரின் வைக்கோற்தொப்பி 100 பவுணாகவும் விலைப்படலாயின. இன்னும் சமீபத்திலே சினிமாப்படம் ஒன்றில் மாட்டீன் கரோல்என்ற நடிகர் அணிந்த உடைஒன்று 50 பவுணாகவிலைப்படலாயிற்று.

### ருஷியாவின் புதியகப்பல்

அணுச்சக்திமோட்டர்கள்கொண்டு இயக்கப்படுவதும், 25,000 தொன் நிறையுடையதுமான நவீனகப்பல் ஒன்றைக் கட்டுவதற்குச் சோவியற் விஞ்ஞானிகள்இருவர் திட்டமிடுகின்றனர். இது வடசமுத்திர பனிக்கட்டிகளை ஊடறுத்துக்கொண்டு வடருஷியாவிலே வெண்கடலிலுள்ள ஆர்காஞ்ஜெல் துறைமுகத்திலிருந்து சைபீரியாவின் தெற்குக்கரையிலே பசிபிக்சமுத்திரத்திலுள்ள விலாடிவஸ்ரக் துறைமுகம்வரையில் மாரிகாலமுழுவதும் கிரமமாகப் பிரயாணஞ்செய்யக் கூடியதாயிருக்குமென்று அவர்கள்கூறுகின்றனர். இந்தக்கப்பல் பனிக்கட்டிகளை உடைத்துச்செல்லும் வழமையான அடிப்புறத்தைக் கொண்டதாயினும் இதிலே மிகவும்அமுக்கமுள்ள நீராவிஜெற்றுகள் பொருத்தப்பட்டிருக்கும். அதனால் அவைகள் கப்பல்செல்லும் கடற்பாதையிலுள்ள வடசமுத்திர பனிக்கட்டிகளை — வருடக்கணக்கான பனிக்கட்டிகளைத்தானும் உருக்கித் தள்ளிவிடும். வருடம்ஒன்றுக்கு இந்தக்கப்பலைக் கொண்டுநடத்த வழமையிலே 1,50,000 தொன் விறகெண்ணெய் தேவைப்படும். ஆனால், இதற்குப்பதில் 78 கிலோக்கிறாம் யூறேனியம்மட்டுமே போதியதாகும்.

### நவீனஉலக கடிகாரம்

தென்மார்க்கின் தலைப்பட்டணமான கோப்பெனுகென் நகரமண்டபத்திலே நவீனஉலககடிகாரம் ஒன்று சென்ற மார்கழி 15-ந்திகதியன்று பகல் 12 மணிக்கு ஓடஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்தக்கடிகாரம் இனிவரும் மூவாயிரம்வருடங்களிலும்—அதாவது அடுத்தமுப்பதுநூற்றாண்டுகளிலும் தொடர்பாக ஓடிக்கொண்டிருக்கும். அதன்மேல் அது அற்பசொற்பமாகப் பழுதுபார்க்கும்படியாய் நிறுத்திவைக்கப்படவேண்டிவரும். இந்தக்கடிகாரத்தைக் கண்டுபிடித்துச்செய்தலில் ஜென்ஸ் ஒல்சென்ஸ்என்ற வறியதேனியரான (தென்மார்க்நாட்டினர்) கடிகாரஞ்செய்வார் ஒருவரே. இதனைச் செய்வதற்குப் படம்போட இவருக்கு முப்பதுவருடங்களும், செய்யப்பத்து வருடங்களும் பிடித்தன. ஆனால், இது பூர்த்தியாகுமுன்னரே இவர் காலஞ்சென்றுவிட்டார். அதனால் மீதிவேலையை அவரது உடன்பணியாளர் செய்துமுடித்தனர். இந்தக்கடிகாரம் இனிவரும் மூவாயிரம்வருடங்களிலும் சூரியன், பூமி, சந்திரன், நட்சத்திரங்கள் செல்லும்மார்க்கத்தைத் தெரிவித்துக்கொண்டிருக்கும். அன்று நடைபெற்ற வைபவத்தின்போது, தென்மார்க்கின் பிறெடறிக் அரசரும், அவரது 11 வயதுடைய பௌத்திரியும் ஒருங்கு சேர்ந்து ஓர்பொத்தானை அழுத்தி இதனை ஓடுவதற்கு ஆரம்பித்துவைத்தார்கள்.

* * *

● இங்கிலாந்திலே மிட்டிள்ரன்—பை—வோர்க்ஸ்வோர்த் எனுமிடத்திலே அங்கிளிக்கன்சபைப் பாதிரியாராய் இருந்துவந்தவரும், விவாகஞ்செய்து நான்கு பிள்ளைகளுக்குத் தந்தையுமான கனம். ஜே. ஈ. ரேர்ணர் அவர்கள் தமதுபதவியை இராசினாமாச் செய்துவிட்டுக் கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்திருக்கின்றார். இவர் அங்கிளிக்கன் சபையிலே 1950-ம் ஆண்டு தியாக்கோன் பட்டமும், அடுத்தவருடம் குருப்பட்டமும் பெற்றிருந்தார்.

● பிரித்தானி நவமாகக்கட்டிய கொமெற் III எனும் ஜெற் ஆகாயப் பிரயாணவிமானம் பரிசோதனைநிமித்தமாகக் கனடாதேச மொண்றியல்நகரிலிருந்து புறப்பட்டு இடையிலே எங்காவதுதரியாமலும், இதற்குமுன் பிரயாணவிமானம்எதுவும் சென்றிராத அத்துணைபெரும் தீவிரகெதியிலும் முதன்முதலாக அத்திலாந்திக் சமுத்திரத்துக்கு மேலாகப்பறந்து சென்ற 28-ந்திகதி புதன்கிழமை லண்டன்நகர் போய்ச்சேரலாயிற்று. இருநகர்களுக்கும் இடையிலுள்ள 3,350மைல் தூரத்தையும் இது மணித்தியாலம் சராசரியாக 548 மைல்வீதம்பறந்துசென்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்தும இரட்சணியம் அனவரதும் இலட்சியம்

—: ஆசிரியர், எல். பாக்கியநாதர் :—

உலகப்பிரசித்திபெற்ற குருத்துவ கல்லூரிஒன்றில் 265 மாணவர் குருத்துவப்பயிற்சி பெற்றுவந்தனர். ஏன் இவர்கள் குருமாராகவா விருப்புகின்றனர்? என்று இவர்களிடம் வினவப்பட்டது. இந்த ஒருவினவுக்குக் கிடைத்த விடைகளோ பல. ஒவ்வொருவிடையும் ஒவ்வொரு ரகத்தைச் சார்ந்தது. குருத்துவபதவியிலே கருத்துள்ளவர்களின் உளவளர்ச்சிக்கு உபயோகமாகும்படி அந்த விடைகளிலுள்ள அபிப்பிராயங்களைத் தொகுத்துத் தருகிறேம்.

தமது குருத்துவபயிற்சியின் முதலாம்வருடத்திலுள்ள மாணவர் தங்கள் குருத்துவ அழைத்தலின் இலட்சியத்தைப்பற்றிக் கொணடுள்ள அபிப்பிராயங்கள் இவை:

"நான் கிறீஸ்துநாதரை எவ்வளவாக அண்டிப் பின்செல்ல முடியுமோ, அவ்வளவாக அண்டிப் பினசெல்ல விரும்புகிறேன்."

"கிறீஸ்துநாதர் தம்மை முழுதும் எனக்குக் கையளித்ததுபோல் நானும் என்னைமுழுதும் அவருக்குக் கையளிக்க விரும்புகிறேன்."

"நான் கிறீஸ்துநாதருக்கு ஆத்துமங்களைக்கொடுக்க விரும்புகிறேன். ஆனல், எல்லாவற்றிற்கும் மேலாக அவர் எதைவிரும்புகிருரோ, அதை அவருக்குக் கொடுக்கவும், என்னைக் குருத்துவசேவைக்கு அவர் அழைப்பதால் அச்சேவைக்கே என்னைத்தத்தம் பண்ணவும் ஆசிக்கிறேன்."

"நான் தேவநேசத்திற்காகவும், தேவனின் திருச்சபைமீதும், ஆத்துமங்களின்மீதுள்ள பற்றுதலுக்காகவும் குருவாக ஆசிக்கின்றேன்."

"எனதுசேவை எந்தஎந்த ஆத்துமங்களின் இரட்சணியத்திற்குத் தேவையோ, அந்த அந்த ஆத்துமங்களின் தேவைக்காகவும், கிறீஸ்துநாதரின் இரட்சணிய வேலையைத் தொடர்ந்து நடத்துவதற்காகவும் நான் குருவாக விரும்புகிறேன்."

* * *

தங்கள் இரண்டாம் வருடப் பயிற்சியிலுள்ள குருத்துவ மாணவரின் பொதுவான விடையும், தனி விடைகளும் இவை:

"தேவனின் உன்னதமகிமைக்காகவும், சங்கைக்காகவும், எங்கள் ஆத்தும இரட்சணியத்திற்காகவும், மற்றவர்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காகவும் நாங்கள் இப்பதவியை விருப்புகிறோம்."

"தேவனின்சேவைக்கு என்னை முழுதும் அர்ப்பணஞ்செய்யவும், அவரை மாத்திரமே நேசிக்கவும், எனது சகபாடிகள், சிநேகிதர்கள் தங்கள்நித்தியமான இலக்கை அடையச் செய்வதற்குப் பொதுவாகச் சமூகசேவைமூலமும், சிறப்பாகக் குருத்துவதொண்டுமூலமும் உதவிசெய்யவும் இப்பதவியை நான்விரும்புகிறேன்."

"என்னையும், மற்றவர்களையும் பூரணப்படுத்துதற்காக இப்பதவியை நாடினேன்."

"இதைப்பற்றி ஒருபுத்தகமே எழுதிவிடலாம் நான் அறிந்தவழிவகைகளில் மிகவுஞ்சிறந்த வழிமூலம் என் ஆத்தும இரட்சணியத்தை நிச்சயப்படுத்த விரும்புகிறேன். என் ஆத்தும இரட்சணியத்தை நிச்சயப் படுத்தும்போது தானே என்னல் இயன்றவரை இன்னும் அநேகருக்கு உதவிசெய்வேன். தேவனைப்பற்றி நான் அறியக்கூடிய எல்லாவற்றையும அறிவேன். அப்படி அறிந்ததை நான்சந்திக்கும ஒவ்வொருவருக்கும் வெளிபபடுத்துவேன். சுருங்கச் சொல்லுகில், நான் ஒரு அர்ச்சியசிட்டனகவே விரும்புகிறேன். இந்தஉலகத்தையே அர்ச்சியசிட்டர்களால் நிரப்பிவிட விழைகின்றேன். இந்தஉலகத்தையே மோட்சஉலகமாக்க அசைப்படுகின்றேன்."

* * *

குருப்பட்டம்பெறுவதற்கு ஒன்றரை வருடங்கள் மாத்திரமே இன்னும் படிக்கவேண்டியிருந்த மாணவரின் அபிப்பிராயங்களாவன:

"நான் சனங்கள் மத்தியில் அவர்களின் ஊழியனுகச் சென்று, அவர்கள் தங்கள் ஆத்துமங்களை இரட்சிக்கவும், தங்கள் அயலாரின் ஆத்துமங்களைக் கிறீஸ்துநாதருக்குவென்று கொடுக்கவும் உதவி செய்வேன். இப்படியான ஊழியத்தின் சம்பாவனையாக எனது இரட்சணியத்தையும நிச்சயப்படுத்துவேன்."

"தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றவும, கிறீஸ்துநாதரைச் சனங்களுக்கும், சனங்களைக் கிறீஸ்துநாதருக்கும் அறிமுகஞ் செய்துவைக்கவும் விரும்புகிறேன். பூசைப்பலி ஒப்புக்கொடுக்கவும, ஞானவிதமாய்ப் பூரணப்படவும் ஆசிக்கிறேன். பொதுவாக எல்லா மனிதருடைய இரட்சணியத்திற்காகவும், சிறப்பாக எனது இரட்சணியத்திற்காகவும் குருவாகவா விழைகிறேன். கிறீஸ்துநாதரின் சபையாகிய திருச்சபையின் ஊழியத்திற்கு என்னைப்பூரணமாக ஒப்படைக்கவே இப்பதவியைத் தெரிந்துகொண்டேன். நான் வேலைகளின்கர்த்தரை நேசிக்கவம், கர்த்தரின் வேலைகளைச் செய்யவும் விரும்புகிறேன்."

* * *

தியாக்கோன்பட்டம்பெற்ற சிலரின் விடைகளாவன:

"இயன்றவரை பூரணமான வாழ்வு வாழவும், மற்றவர்களை வாழப்பண்ணவும், திருச்சபையின் விருத்திக்காகச் செய்யப்பட வேண்டிய பாரதூரமான வேலைகளில் பங்குபற்றவுமே இப்பதவியைத் தெரிந்துகொண்டேன். பூசைப்பலி ஒப்புக்கொடுக்க விரும்பினேன். கிறீஸ்துவசீவியத்தின் சக்தியை உலகத்திற்குக்கொடுக்க விழைந்தேன். எங்கள் ஒவ்வொருவர்மீதும, எங்கள் ஒவ்வொருவரது கிரிகைகள்மீதும் தேவனுக்கிருக்கும் கரிசனை எப்படிப்பட்டதென்பதைக்காட்டவும், இப்படிப்பட்ட கரிசனையுள்ள தேவனுக்காக நாம் எப்படிச் சீவிக்கலாமென்பதை நடைமுறையிற் பயிபிக்கவும் இப்பதவியை நாடினேன்."

"நித்தியரானபிதாவுக்கு எமது பாவங்களின் பரிகாரமாகவும், எம்மாற் செலுத்தப்படும் மகிமையாகவும், பூசைப்பலியை ஒப்புக்கொடுப்பதற்காகவும், தேவதிரவிய அனுமானங்களின் மூலம் பொதுசனங்கள் தேவவரப்பிரசாதத்தை அபரிமிதமாகப் பெற்றுக் கொள்ளும்படி அத்தேவதிரவிய அனுமானங்களை நிறைவேற்றுதற்காகவும் குருத்துவத்தைத் தேடிவந்தேன்."

"விசேஷமாகத்தேவனை மனிதனிடங் கொண்டுவரும்படியாகவும், மனிதனைத் தேவனிடம் வழிநடத்தும்படியாகவும் குருத்துவத்தின் தத்துவங்களை ஆசித்தேன்."

"கிறீஸ்துநாதரின் உண்மைகளை உலகத்திற்குப் பிரசங்கிக்கவும், மகத்தான பூசைப்பலியை ஒப்புக் கொடுக்கவும் விரும்பினேன். ஏனெனில், நான் கிறீஸ்துநாதரை நேசிக்கிறேன்."

## VACANCY

வலைப்பாடு, றோமான் கத்தோலிக்க கலவன் பாடசாலைக்குத் தலைமைஆசிரியர்ஒருவர் தேவை. பின்வரும் தாரதாமுடையவர்கள் உடனே விண்ணப்பஞ் செய்துகொள்ளலாம்.

தாரதரம்

1. றோமான் கத்தோலிக்கர்.
2. பயிற்றப்பட்ட முதல்வகுப்புத் தாரதரப் பத்திரமுடையவர்.
3. 20 வருட ஆசிரியசேவை செய்தவர்.

**Very Rev. Fr. S. Emmanuel,** O. M. I.,
Actg. Gen. Manager,
R. C. Schools,
Bishop's House.

Jaffna, 3-1-56

# காவலா வருக!

அறுசீர் விருத்தம்

1. திருமறைக் காவலோனே! தீந்தமிழ்க் காவலோனே!
தருநிறை ஈழமோடு தாய்வட நாடுமற்றைப்
பெருந்துறைத் தமிழ்நாடெல்லாம் பிரியமோ டேகிஆன்ம
மருந்தறை வீரவானே வான்புகழ் பரப்பவாவா!

2. செந்தமிழ் அரசிப்பக்கல் சிங்களப் பாங்கியோடு
அந்தமில் உலகஞ்சுற்றும் ஆங்கிலச் சகியுங்கூடிக்
சூந்தநாற் றிசையும்போற்றுங் குலவுயாழ்ப் பாணம்நின்று
செந்தழற் கதிரோன் என்னச் செகமெலாம் துலக்கவாவா!

3. சத்திய மலையாமுன்னைத் தகர்த்திடல் எழிதாய்எண்ணிச்
சுத்தியல் அரிவாள்கொண்டார் சோர்ந்தனர் கைகால்கண்டோம்
இத்தொடு எண்பதாண்டு ஏறுபோல் வீறுகொண்டு
வைத்தகால் பின்றாக்காத வலிவினுய் வளர்ந்துவாவா!

4. வாரமோர் முறைபோதாகி மணங்கமழ் மலரோய்வாவா!
காரமார் கடுகேயாகிக் கலைமருந் தளிப்போய்வாவா!
சாரமார் கன்னலாகிச் சகலமும் இனிப்போய்வாவா!
தீரமார் ஞானிஏவச் செழிப்பவோய் சிறக்கவாவா!

5. ஆதவன் விளக்கைஏற்ற அலருகா மலர்கள் தூவச்
சூதவம் கீதம்பாடச் சூடுடை மயில்களாட
மாதவத் தடியார்பீடம மருவியே பலியையூட்டப்
பூதலம் புத்தாண்டுன்றன் புதுவினை தொடக்கவாவா!

— "யுவன்". கரம்பொன்



# நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

பாவிகளுக்கு அடைக்கலமும் மக்களின் சகாயமுமான சதாசகாய மாதாவிடம் நான் கேட்டுக்கொண்ட மன்றாட்டம் கிடைக்கப்பெற்றதிற்குநன்றியாக இதைப் பிரசுரிக்கிறேன். ஏழைகளின் தஞ்சமான தேவதாயார் இன்னும் நான்கேட்டிருக்கும் மன்றாட்டங்களையும் பெற்றுத்தந்தருளுவாராக. சதாசகாயமாதாவின்நாமம் எங்கும் புகழப்படுவதாக.

எழுத்தூர், மன்னர். — கஸ்பார் லூசியா

* * *

அமலயேசுவின் திருஇருதயமூலமாகவும், ஈராறுவான்முடியும் இலங்கிடுவான் மதியும் சீராகவேயணிந்த கன்னிமாமரி அன்னையின் திருவருளாலும் அவவின் பத்தாவாகிய சூசைமாமுனியின் அருளாலும், கோடிஅற்புதராம் அர்ச். அந்தோனியாரின் அருளாலும், குழந்தையேசுவின் தெரேசம்மாள், அர்ச். றீத்தம்மாள் இவர்களது அருளாலும் நான் கேட்டுக் கொண்டவரம் கிடைக்கப்பெற்றதால் நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கிறேன்.

Mrs. I. F.

* * *

யேசுவின்திருஇருதய இரக்கத்தாலும், சதாசகாயமாதா, அர்ச். அந்தோனியார் இவர்களின் மன்றாட்டாலும் எனக்கு நடந்த சத்திரசிகிச்சையில் பூரணசுகமடைந்தேன். இவர்களின்நாமம் என்றும் புகழப்படுவதாக. நேர்த்திப்படி இதைப் பிரசுரிக்கிறேன்.

வதிரி — இராசு

* * *

பலமாதங்களாக எனக்கு ஏற்பட்டிருந்த கன்னப்புற்றுநோய் எவ்விதசிகிச்சைக்கும் குணமடையாமல் என்னைத் துன்புறுத்தியது. சதாசகாய மாதாவின் பேரில் முழுநம்பிக்கையுடன் அவவின் உதவியைக்கேட்டு மன்றாடினேன். பின் சத்திரசிகிச்சையால் விரைவில் குணமடைந்தேன். நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன. மாதாவின்நாமம் என்றென்றும் புகழப்படுவதாக.

வ. பிறஞ்சீஸ் பெர்னண்டோ
குடாப்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவ அழைத்தல்களின் வருட ஆரம்பம்

## நான் ஓர் குருவாகக் கூடுமா?

கிறீஸ்துநாதரின் முன் என்றும் திறந்துகிடக்கிறது பூமண்டலம். இன்றுமே அகிற்காணும் ஆயிரங்களிடையிலிருந்து தமது அன்பர்களை — குருப்பிரசாதிகளை — பதிலாட்களை — தம்மைப் போன்றமறுகிறீஸ்துகளை அவர் தெரிந்தெடுக்கிறார். இவ்விதம் நமது யேசு இரட்சகரால் அவரைப்போலாகும்படி தெரிந்தெடுக்கப்படுதலே குருத்துவத்தின் நோக்குள்ள தேவ அழைத்தலாகும். சிநேகம்என்றால இளைஞனுக்கு அதில் ஓர் தனியுணர்ச்சியும், எழுச்சியும் உண்டு.

சீவியத்தில் ஓர் அரும்பெரும் பணிபுரிந்து ஓர்வீரர்திலகமாகத் திகழவிரும்புவது இளைஞனின் இயல்பு. எனவே, யேசுவின் — உனது நேசஇரட்சகரின் சிநேகத்தால் உன் இருதயம் பற்றியெரிந்து, அவருடைய அன்புச்சக்தியால் நீ தெய்வீகவாழ்வு வாழவும், தியாகத்தின் உச்சநிலையை அடைந்து சத்தியமறை பரம்பச் செய்யத் தீவிரமாய்உழைக்கவும் வேண்டுமென்ற ஆவல் உன்னிடம் இல்லையா? இதே அன்பு அக்கினியைத்தான் நீ மற்றவர்கள் இருதயத்தில் பற்றியெரியப் பண்ணவேண்டும்.

இளைஞனே! வீர இரத்தம் உன்வாலிப நரம்பில் உணர்ச்சி ததும்ப ஓடுகிறதன்றோ! உனது தாய்நாட்டை நேசிக்கும் நீ — உன்சொந்தச் சகோதரர்களை — அவர்களின் அழியா ஆத்தும இரட்சணியத்தைப் புறந்தள்ளிச் சோம்பியிருத்தல் பொருந்தாது. எனவே, அன்புத்தொண்டாற்ற ஆவலுறுகின்றாயா? அப்படியெனில், உன் உயிரைப்பேணாது கர்த்தரின் திராட்சைத் தோட்டத்திலே உடல்,பொருள், ஆவியை ஒடுக்கிஉழைக்க முன்வரவேண்டும் — நீ ஓர்குருவாக வேண்டும். ஆனால், நீ ஓர்வேளை எனக்குத் தேவ அழைத்தல் உண்டா? என வினவிக்கொள்ளலாம். — உன்னிடம்:

குருத்துவகடமைகளை வெற்றிகரமாய்ச் செய்து முடிக்கப்போதிய தேகாரோக்கியம்,

வேதசாஸ்திரங்களைக் கற்றுத் தேற வேண்டிய புத்திசக்தி,

எல்லாவற்றிற்கும் மேலாகப் புண்ணிய சீவியத்தில் பழக்கம் பெறத்தக்க களங்கமற்ற சுபாவம்,

லௌகீக நோக்கங்களில் நின்று விலகித் தனது ஆன்மஇரட்சணியத்தைச் சுலபமாக்குதல்,

பிறர் ஆன்ம ஈடேற்றத்திற்கு உதவுதல் — இவைகள் இருப்பின் நீ குருத்துவத்திற்கு அழைக்கப்பெறுவதாக அறிந்துகொள்ளலாம். அப்படியானால் உனதுபங்குக்குருவானவருடன் இதைப்பற்றி ஆலோசிப்பாயாக. களங்கமற்ற மனதுடன் யாவற்றையும் அவருக்கு எடுத்துச்சொல். இதை யோசித்துச் செய்வதாக ஒருநாளும் பின்போடவேண்டாம்.

ஓர் குருவானவரின் சீவியம் கிறீஸ்துநாதரது சீவியத்தின் தொடர்ச்சியேயாகும் என்பதை அவரே வெட்ட வெளிச்சமாக்கியிருக்கிறார். "நான் திராட்சைச் செடி, நீங்கள் கொடிகள்." எனவே, தாய்த்தண்டாகிய கிறீஸ்துவிலிருந்து தெய்வவரப்பிரசாதமாகிற சீவியசலத்தைக் கொடிகளாகியகுருமார் சுவீகரித்து நமக்கு அளிக்கின்றனர். காலையெழும் கதிரவனைப்போல் கர்த்தர் குருமாரின் திருக்கரங்களில் தங்குகிறார் காலைப்பொழுதில். கர்த்தரை ஏந்தும் அத்திருக்கரங்களின் பாக்கியமேபாக்கியம்! இவ்விதம் குருமாரின் அச்சாதிசயத்திற்குரிய சேவையே யேசுவிற்கு ஆத்துமாக்களையும், ஆத்துமாக்களுக்கு யேசுவையும் அளிக்கின்றது. ஆத்மீக பரிபாலனத்தில் குருமார் செய்யும் தொண்டுகளை யாரால் விபரிக்கமுடியும்?

உலகின் மத்தியில் இருப்பினும் உலகஇன்பம் வெறுப்பவர். குடும்பங்களின் அங்கம்எனினும் ஒன்றிற்கும்சொந்தம் அற்றவர் கர்த்தரே! இத்தகைய சீவியவாளர் யார்? கிறீஸ்துவின் குருவே நீர்தானே!

இவ்விதசந்தோஷங்களுக்கிடையில் ஓர்குருவானவரின் வாழ்வில் துக்கசாகரங்களும், கஷ்ட துன்பங்களும் இல்லாமலில்லை. ஆனால், அவர்கள் தேவனின் அருட் பிரசாதங்களினால் இவற்றில் வெற்றியடைய முடியும்.

இன்று நாம் "ஆண்டவரே, எங்களுக்குக் குருமாரைத் தந்தருளும் — ஏராளமாகத் தந்தருளும்" என்று பிரார்த்திக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். இன்று எமது பரிசுத்தமாதாவாகிய திருச்சபை அநேகம்குருமாரை வேண்டிநிற்கிறது பரிசுத்த பிதா 12-ம்பத்திநாத பாப்பரசர் சொல்வார்: "எங்கு பார்த்தாலும் அப்போஸ்தலிக்க சேவைக் ஆள்போதாது. பலபாகங்களிலுமுள்ள ஆயிரமாயிரம் ஆத்துமங்கள் அந்தகாரத்தினின்று வெளிச்சத்திற்கு வர ஆத்திரப்படுகின்றன. அந்தோ பரிதாபம்! அலைந்துதிரியும் அவ்வாடுகளை உண்மை மந்தையிற் கொண்டுவந்து சேர்க்க ஆயர்களில்லை. 'அறுவடையோ மிகுதி, வேலையாட்களோ சொற்பப் பேர்'' — எனவே, இளைஞனே! வருங்கால இலங்கையின் இரட்சணியம் உன்னில் தங்கியுள்ளது என்பதை மறவாதே. நம்பிக்கையுடனும், தாராள மனதுடனும் ஆண்டவனின் அழைப்பிற்குச் செவிகொடு! ஈழத்தின்வாலிபர்களே ஈழத்து மக்களுக்கு இரட்சணியம் கொண்டுவர வேண்டியவர்களாய் இருக்கிறார்கள் என்பதை ஈழத்து ஆயர்கள் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்கள்.

ஆகவே இளைஞனே! இந்த அன்பு அழைப்பிற்குச்செவிகொடுக்கப் போகிறாயா? அன்றேல், சுவிசேஷத்திலுள்ள அச்செல்வந்த இளைஞனைப்போல் இல்லையென்று சொல்லிப் பின்வாங்கப் போகிறாயா?

எம்தீவின் நாலு பகுதிகளிலுமிருந்து வருடாவருடம் பல இளைஞர்கள் தேவ அழைத்தலுக்குச் செவிசாய்த்து மேற்றிராசனக் குருமடத்தில் வந்து சேருகிறார்கள்.

# பாடு பாப்பா

"ஜெயம்"

### பல்லவி

பாடுபாப்பா பாடுபாப்பா — யேசு
பாதம் பணிந்துநிதம் பாடுபாப்பா

### சரணங்கள்

கன்னித் தமிழ்முழங்கப் பாடுபாப்பா — 'பாது
காவலன்' புகழ்விளங்கப் பாடுபாப்பா
அன்னைபிதா தெய்வமென்று பாடுபாப்பா — என்றும்
ஆலயந் தொழுவோமென்று பாடுபாப்பா.

சத்தியவே தந்தழைக்கப் பாடுபாப்பா — எங்கள்
சற்குருக்க ளைப்பணிந்து பாடுபாப்பா
முத்திபெற வேணுமென்று பாடுபாப்பா — வேத
மொழியே கடவோமென்று பாடுபாப்பா.

எண்ணெழுத் தறிவோமென்று பாடுபாப்பா — நாளும்
ஈகை தவறேமென்று பாடுபாப்பா
மண்ணுலகு மாயமென்று பாடுபாப்பா — தஞ்சம்
மாமரியாள் பாதமென்று பாடுபாப்பா.

உண்மைசொல வேண்டுமென்று பாடுபாப்பா — வாழ்வில்
ஒழுக்கந் தவறேமென்று பாடுபாப்பா
புண்ணியம் புரிவோமென்று பாடுபாப்பா — உள்ளப்
புனித மடைவோமென்று பாடுபாப்பா.

அன்பை வளர்ப்போமென்று பாடுபாப்பா — பாழும்
அச்சந் தவிர்ப்போமென்று பாடுபாப்பா
துன்பந் துடைப்போமென்று பாடுபாப்பா — பாரிற்
துணிவு படைப்போமென்று பாடுபாப்பா.

கோபந் தணிவோமென்று பாடுபாப்பா — பொல்லாக்
கொடுமை யொழிப்போமென்று பாடுபாப்பா
பாபம் வெறுப்போமென்று பாடுபாப்பா — கூடும்
பகைமை மறப்போமென்று பாடுபாப்பா.

சோம்பித் திரியோமென்று பாடுபாப்பா — தேக
சுகத்தைப் பெறுவோமென்று பாடுபாப்பா
வீம்பை விரும்போமென்று பாடுபாப்பா — கொண்ட
வினையை முடிப்போமென்று பாடுபாப்பா.

**Help to Teachers and Students**

Either Sex Senior School Candidates (irrespective of credit passes) can be helped to do Inter-Arts or B. A. in Indian Universities privately June 1956 —Recognised in Ceylon.

*Please communicate immediately:*

**S. Kumaravelu, B. A.**
Teacher,
Chulipuram.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

இரக்கம்நிறைந்த சதாசகாயமாதாவே! எனது குழந்தைக்குத் திடீரென ஏற்பட்டுள்ள கடுமையான வியாதி வைத்தியரினால் கைவிடப்பட்டபோதிலும், உம்முடைய இரக்கத்தைக் கெஞ்சிமன்றாடினேன். உமது அளவுகடந்தசலுகையால் எனதுகுழந்தை சுகமடைந்துவருகிறது. பூரணசுகம் அடையும்படியாகவும், உமது புகழ்ச்சிக்காகவும், எனது நேர்த்திக்கடக்காகவும் இதைப் பிரசுரிக்கிறேன். சதாசகாயமாதாவின் நாமம் புகழக்கடவது.

பிச்சாட் லேன், ஏ. ஞார்தமேரி
மருதானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய கத்தோலிக்க பிரசுரங்கள்

| | ரூ. சத. |
|---|---|
| புதுத்தியானங்கள் (அனுதின தியானக்குறிப்புகள்) | ...15-00 |
| சத்தியவேத சித்திரவிளக்கம் | ... 5-50 |
| புதியஏற்பாடு (பெரிது) | ... 8-50 |
| ,, (சிறிது) | ... 3-75 |
| ஞானோபதேசக் கோர்வை (மூன்று பாகங்களும்) | ... 9-75 |
| சத்திய வேதாகம சங்க்ஷேபம் பழையஏற்பாடு & புதியஏற்பாடு | 1-00 |
| அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் | ... 1-00 |
| திருப்பாடுகளின்மேல் தியானம் | ... 1-25 |
| கிறீஸ்துநாதர் அனுசாரம் | ... 3-25 |
| வாழ்க்கையில் வழிகாட்டி | ... 2-75 |
| கன்னியர் ஒழுக்கம் | ... 1-00 |
| திருப்பாடுகளின் மேல் புதுத் தியானங்கள் | ... 1-25 |
| தாவீது இராசாவின் 150 சங்கீதங்கள் | ... 2-60 |
| யேசுநாதர் | 2-75 / 3-90 |
| அன்பின் அழைப்பு | ... 2-75 |
| அன்பின் அனல் | ... 45 |
| அன்பின் அரசர் | ... 2-00 |
| கத்தோலிக்கு களஞ்சியம் | அச்சில் |
| மன்ரேசா | ... 3-00 |
| அர்ச்சியஷிஷ்டவாரம் | ... 1-00 |
| ஞானசீவியம் | ... 3-00 |
| கிறீஸ்துநாதர் எங்கள் கர்த்தா | ... 1-00 |
| பிரதான மந்திரங்களின் வியாக்கியானம் | ... 2-25 |
| என்பலி (சங்கீதத்துடன்) | ... 1-25 |
| என்பலி (சங்கீதம் இல்லாமல்) | ... 40 |
| மரியாயின் மைந்தர் மயாக்ஷம் | 2-50 / 2-00 / 1-50 |
| மரியாயின் வல்லபம் | ... 2-00 |
| கற்பு என் பொக்ஷம் | ... 50 |
| தேவமாதாவின் அமலோற்பவ மகிமை | ... 50 |
| குருக்களுக்காக ஜெபிப்பதேன்? | ... 25 |
| புதுநன்மை பாடத்திட்டம் | ... 90 |
| திருக்குடும்ப பக்திமாலை | ... 3-00 |
| பத்தாம் பத்திநாதர் | ... 2-60 |
| திருஇருதய வணக்கமாதம் | ... 2-00 |
| சூசையப்பர் வணக்கமாதம் | ... 2-00 |
| திருஇருதய நவநாள் | ... 25 |
| உத்தரிக்கிற ஆத்துமங்களுக்கு உதவி நவநாள் | ... 35 |
| உத்தரிக்கிற ஆத்துமாக்களின் வணக்கமாதம் | ... 1-65 |
| செந்துகில் (அர்ச். மரியகொறெற்றியின் வாழ்க்கைச்சித்திரம்) | ... 1-60 |
| சனிக்கிழமைப் புதுமை | ... 2-00 |
| ஞாயிற்றுக்கிழமைப் புதுமை | ... 1-30 |
| திங்கட்கிழமைப் புதுமை | ... 1-30 |
| தாழ்ச்சிக் கண்ணுடி | ... 50 |
| துறவற சல்லாபம் | ... 1-00 |

* * *

**கத்தோலிக்க சரிதைகளும், நாவல்களும்**

| | |
|---|---|
| வேதசாட்சி | ... 1-00 |
| பலித்த கனவு | ... 1-00 |
| தமிழ்த்தூது | ... 3-60 |
| அர்ச். சூசையப்பரின் மகத்துவம் | ... 1-30 |
| அர்ச். சவேரியார் | ... 1-00 |
| தேவப்பிரசைகள் திருச்சரிதை | ... 1-60 |
| அர்ச். சரித்திரம் 4 பாகமும் | ... 12-00 |
| யேசு திருச்சரிதை | ... 1-00 |
| யேசுவின்சிறிய புஷ்பம் | ... 1-10 |
| அர்ச். அந்தோனியார் சத்துரு சங்காரமாலை | ... 1-00 |
| அர்ச். சூசையப்பர் | ... 55 |
| அர்ச். அருளானந்தர் | ... 2-00 |
| அர்ச். ஞானப்பிரகாசியார் சரித்திரம் | ... 1-10 |
| அர்ச். வின்செண்ட் தெ பவுல் | ... 1-10 |
| பிரதாப முதலியார் சரித்திரம் | ... 3-90 |
| பிரதாப முதலியார் சரித்திரம் சிறுவர், பதிப்பு | ... 2-00 |
| அர்ச். சவேரியார் சரித்திரம் | ... 3-25 |
| பங்கிராஸ் | ... 3-50 |
| இரத்தம்வடிந்த லீலி | ... 75 |
| இன்பத்திலும் துன்பத்திலும் | ... 2-00 |
| திக்கற்ற தையல் | ... 2-00 |
| மலரோ மணமோ | ... 2-60 |
| லீலிமலர் (அல்லது)கற்பெனும் பரிசுத்த புண்ணியம் | ... 1-55 |

# எமது கத்தோலிக்க பிரசுரங்கள்

| | ரூ. ச. |
|---|---|
| சின்னக் குறிப்பிடம் | ... 30 |
| பெரிய குறிப்பிடம் | ... 50 |
| மெய்விவாகக் குறிப்பிடம் | ... 05 |
| உறுதிப்பூசுதற் குறிப்பிடம் | அச்சில் |
| சத்தியவேத தர்ப்பணம் போதககாண்டம் (Part I) | ... 2-50 |
| எனது பூசைப் புத்தகம் திவ்வியபூசைஆராதனையை முழுதாய் அடக்கியது. | |
| கிளேஸ் பேப்பர் | ... 5-00 |
| பைபிள் ,, | ... 5-75 |
| ,, அடையாளமுள்ளது | ... 6-00 |
| மோக்ஷபாதை (கலிக்கோ) | ... 5-00 |
| ,, (தோல்) | ... 7-50 |
| முத்தித்திறவுகோல் (கலிக்கோ) | ... 2-50 |
| ,, (தோல்) | ... 3-50 |
| செபச்செண்டு | ... 75 |
| பிரசித்த ஆராதனையின் சாதாரண செபங்கள் | ... 2-00 |
| திவ்விய பூசையின் சாதாரண செபங்கள் | ... 40 |
| நித்திய ஆராதனை | ... 25 |
| இரா ஆராதனை | ... 25 |
| திருமணித்தியாலம் | ... 40 |
| திவ்வியபூசை மகத்துவம் | ... 2-50 |
| பூசை உதவி மந்திரம் | ... 40 |
| பூசை உதவி மந்திரம் (மட்டை) | ... 15 |
| வேதாகமவாசிப்பு | ... 90 |
| சற்பிரசாத அன்பன் | ... 20 |
| யேசுநாதரின் சுவிசேஷம் அல்லது நான்கு சுவிசேஷங்களின் ஒப்புமை | ... 2-90 |
| பசாம் ... | ... 1-50 |
| சிலுவைப் பாதை | ... 25 |
| மகா மனந்திரும்புதல் இயக்கப் பிரசங்கங்கள் | ... 1-00 |
| சுவிசேஷ விரித்துரை (பசாமுடன்) | ... 6-50 |
| (பசாமில்லாமல்) | ... 5-00 |
| கத்தோலிக்கு கீர்த்தனைமாலை லத்தீன் 1-ம் பகுதி (நோட்டில்லாமல்) | ... 75 |
| தமிழ் 2-ம் பகுதி (நோட்டில்லாமல்) | ... 75 |
| இரண்டும்சேர்த்துக் கட்டியது (நோட்டில்லாமல்) | ... 1-50 |
| லத்தீன் (1-ம் பகுதி நோட்டுகளுடன்) | ... 2-25 |
| தமிழ் (2-ம் பகுதி நோட்டுகளுடன்) | ... 2-25 |
| தமிழ் லத்தீன் இரண்டும் (நோட்டுகளுடன்) | ... 4-75 |
| கிறீஸ்துநாதர் சரித்திர ஆராய்ச்சி | ... 75 |
| ஆண்டவர் சரித்திரம் (Part I) | ... 90 |
| ,, (Part II) | ... 90 |
| ,, (Part III) | 90 |
| திருஇருதய வணக்கமாதம் | ... 1-50 |
| தேவமாதாவின் வணக்கமாதம் | ... 1-50 |
| மரியாயின் மாசில்லாத இருதயப் பொக்ஷம் | ... 1-50 |
| அவர்கள் மூன்று சிறுவர்கள் (பாத்திமா) | ... 2-50 |
| கிறீஸ்துநாதரும் அவருடைய போதனைகளும் | ... 1-50 |
| நவதின உற்சவம் | ... 75 |
| தரும அப்பம் | ... 1-00 |
| பத்திச் சபைகள் | ... 20 |
| ஆத்தும தரிசனம் | ... 20 |
| தமிழரின் பூர்வசரித்திரம் | ... 50 |
| ஹெலேனா அல்லது திருக்காய அடையாளம்பெற்ற [illegible] கைக் கன்னிகை [illegible] | ... 35 |
| அர்ச். லூயிமேரி கிறிஞ்ஞோன் சீவிய சரித்திரம் | ... 40 |
| இலங்கும் மகிமைமுடி | ... 30 |
| ஆத்துமாக்களின் அழுகைக்குரல் | ... 1-50 |
| ஞானவொடுக்கப் பிரசங்கம் | ... 1-50 |
| புதியஏற்பாட்டின் திருப்பலி | ... 25 |
| Oremus Book | ... 1-25 |

- தபாற்செலவு பிரத்தியேகம்.
- புஸ்தகப் பெறுமதியின் அரை வாசிப்பணம் அனுப்பாத வி.பி.பி. கவனிக்கப்படமாட்டாது.

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

---

**அர்ச்சியசிஷ்ட அந்தோனியாரின் தருமக்கோணம்**

சேன் வின்சேன்ற் டி போல் தருமசபை யாழ்ப்பாணம்



## நத்தார், புதுவருட சோபனம்

சென்வின்சென்ற் டீ போல்சபை(அர்ச். சூசையப்பர் பந்தி) யின் அங்கத்தவர்கள், தங்கள் ஏழைகளுக்கு உதவி செய்யும் பொருட்டுத் தயாளகுணத்தோடு தருமம் ஈந்தருளிய சகல பரோபகாரிகளுக்கும் மனமுவந்து நன்றிகூறுகின்றார்கள். இன்னும் அர்ச். அந்தோனியாரின் தருமமுயற்சியைஎங்கும் விளங்கவைக்க முன்னிற்கும் நேயர்களுக்கும் நத்தார், புதுவருடசோபனம்கூறி, ஆத்தும சரீரநன்மைகளை ஏராளமாய்ப் பொழிந்தருளும்படி கருணை நிறைந்த திவ்வியயேசுவைப் பிரார்த்திக்கின்றார்கள்.

**கேட்டநன்மைகள் அனுகூலமானதினால் அப்பத்துக்கு அனுப்பப்பட்ட காணிக்கைகள்**

யாழ்ப்பாணம்: பி.ஜே. அல்பேட் 4-00, மிசெஸ் எல். லூவிஸ் 1-00, ஏ. பிரான்சிஸ்பிள்ளை 5-00, மார்கறெற் லீனுஸ் பிள்ளை 1-00, பி. எவ். யோசேப் 1-00—பாஷையூர்: டி. வலோரியான் 1-00, எம். எலிசபேத் 1-00, மிசெஸ் பறுனாந்து 1-00 —முள்ளிக்குளம்: ஜி. வலத்திசார் கூஞ்ஞு 5-00, டி. கபிரியேல் அப்புகாமி 2-00, எஸ். வரவணிக்கா 2-00, ஏ. பி. இஞ்ஞாசியா கூஞ்ஞு 1-00, எஸ். ஞானம்மா குரூஸ் 1-00, ஏ. சிமியோன் 2-00 — சிங்கப்பூர்: எஸ். அன்ரனி 5-00, எம். ஏ. பெஞ்சமின் 20-00 — மலாயா: எஸ். யோசேப்பு 12-87 — அப்புத்தளை: எஸ். எம். யோசேப்பு 1-00 — கரவெட்டி: பி. கபிரிகேற்பிள்ளை 5-00, எஸ். பஸ்ரியாம்பிள்ளை 2-00 — மாம்புரி: வி. மனுவேல் 5-00, ஆர். எம். சூசை 5-00—கல்கமுவா: ஏ. மரியானுள் 20-00, எஸ். மரியாம்பிள்ளை 3-50—சூராவத்தை: எஸ். ஆசீர்வாதம் 2-50—இற்றுலை: மிசெஸ் டி. ஜே. அன்ரன் 2-00, பிறுங் அன்ரன் 6-00 — கொஸ்லான்ட்: எஸ். கே. எம். பிள்ளை 10-00 — செட்டிகுளம்: ஜே. இராயப்பு 10-00, டி. வஸ்தியாம்பிள்ளை 10-00 — கொழும்பு: ஜி. அந்திரேயாஸ் 6-00, ஜே. எம். நேசமணி 2-00, மிஸ் ஏ. அந்தோனிப்பிள்ளை 9-00, எல். எல். பெர்ணண்டோ 5-00, எஸ். தோமஸ்பிள்ளை 2-00—மாதகல்: எஸ். தொம்மைப்பிள்ளை 2-00—உடப்புசலாவை: ஏ. எஸ். பீற்றர் 7-00—வின்டுலா: எம். பி. போல் 6-00 — அரிப்பு: ஜே. ஞானம்மாகுரூஸ் 9-00 — கொற்றன்தீவு: ஆர். எஸ். பி. [illegible] பிள்ளை 4-00—சருகைல்: ஜி. எஸ். சின்னத்துரை 2-00—கொள்ளுப்பிட்டி: எஸ். பி. நோனீஸ் 7-00 — மஸ்கேலியா: டி. எஸ். பீற்றர் 10-00 — வட்டக்கொடை: எம். ஐ. ஜே. தம்பி 3-00 — வட்டவளை: ரி. அன்ரனி குரூஸ் 8-00, எஸ். ஜோண் 3-00—பண்டாரவளை: சூசைமரி பீற்றர் 5-00—கம்பளை: மிசெஸ் ஏ. டி. சேவியர் 6-00 — அக்கரபற்றனை: எல். ஏ. எஸ். தோமஸ் 1-00—உடப்புவா: ரி. இ. மிறுஸ் 2-00 — வதியப்போலா: டி. ஜி. டேவிற் 2-00 — தலவாக்கொலை: ஏ. பி. சிங்கராயர் 40-00 — பருத்தித்துறை: ஆர். தோமஸ் 5-00 — நுவரெலியா: ரி. சவுந்தரநாயகம் 9-00 —பரந்தன்: ரி. மரியாம்பிள்ளை 2-00 — முள்ளியவளை: எம். இம்மனுவேல் 2-00 — திரிகோணமலை: தோமஸ் மோசேஸ் 2-00 — டினியாயா: எம். சி. தோமஸ்பிள்ளை 5-00—பூக்குளம்: வி. பறுனாந்து 5-00 — மன்னார்: எஸ். சுந்தரி 4-00 — கற்றன்: எம். சந்தனம் 2-00.

| | |
|---|---|
| The Director, St. Joseph's Conference Bishop's House JAFFNA. | சேன் வின்சேன்ற் டீ போல்சபைத்தலைவர் மேற்றிராசன மாளிகை, யாழ்ப்பாணம். |

# வத்திக்கான் அல்லது ...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

திக்கான்வாசிகள் தங்கள்படகுகளில் கடற்படையைச் சேர்ந்தோரென வத்திக்கான்கொடியைப் பறக்கவிடலாம்.

உலகத்திலேயே மிகச்சிறந்த கலைக்களஞ்சியங்களை வத்திக்கானில் காணலாம். 25 பெரியஅறைகள் கலைப்பொருட்களால் நிரப்பப்பட்டிருக்கின்றன. அவைகளை நெப்போலியன் பரீஸ் நகருக்கு எடுத்துச்சென்றான். ஆனால், பின்னர் அவைகள் திரும்பவும் அனுப்பிவைக்கப்பட்டன. இரபாயேல், லெயோனார்டோ டாவிஞ்சி, டிஷியன், மிக்கேல்ஆஞ்சலோ, இன்னும் உலகத்தில் பெயர்பெற்ற ஓவியர்களின்ஓவியங்கள் அங்கு காப்பாற்றப்பட்டுவருகின்றன. அங்குள்ள நூல்நிலையத்தில் 50,000 கையேட்டுப் பிரதிகளும், 3,50,000 அச்சுப்பிரதிகளும்உள்ளன. சிக்ஸ்ரைன் மண்டபத்திலே (SixtineHall) உலகில் மிகப்பழமைவாய்ந்த பொருட்களின் தொகுதியே உள்ளதெனலாம்.

ஆனால், இன்றைக்கு வத்திக்கானின் மிகஉயர்ந்தபொருள் பாப்பரசர் 12-ம் பத்திநாதரே. அவருடைய அன்பும், அனுதாபமும், கருணையுமிக்க பிரசன்னம் வத்திக்கான்நகரின் தேஜசுக்கு முக்கியகாரணமாகும். அவரது இருக்கையே அந்நகரின் பாதுகாப்புக்கும் காரணம். அதனால்தான் அந்நகரை நித்தியநகர், பாப்புவின்நகர், ஒளியின் நகர் என்றெல்லாம்அழைத்து மக்கள் மகிழ்கின்றார்கள். ஆம், உண்மையில் சமாதானத்தை மக்களிடையே நிலைநாட்டக்கூடிய உண்மைஒளி அங்கிருந்தேவருகின்றது.

**கல்வியின்தன்மை இல்லாதவனை மிருகம்என்று சொல்லிவிட முடியாது. ஆனால், மனிதத்தன்மை இல்லாதவனை மிருகம்என்று அழைக்கலாம்.**

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Tion. Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, January 5-1956.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியவேத பாதுகாவலன் அனுபந்தம் 5—1—1956

# புனிதவீரன்

## அருமைச் சகோதரங்களே!

உங்கள் அனைவருக்கும் புத்தாண்டுச் சோபனங் கூறுகிறோம்.

இந்தப் புதுவருடத்தைக் காணும் பாக்கியத்தை எமக்கருளிய கருணைக்கடலான எம்தேவனுக்கு முதல்தோத்திரம் உண்டாவதாக. இவ்வருடத்தில் அவரை நாம் அதிகமதிக மறியவும் நேசிக்கவும் முயற்சிசெய்ய வேண்டிய கடமையுண்டு.

பள்ளிக்குச் செல்லும் கடமையுடைய நீங்கள் இந்தக் கடமையை மிகவும் மதித்து அதைச் சரிவரநிறைவேற்ற வேண்டும். உங்கள் இரட்சணியம் இதிலுண்டு.

ஆமையும் முயலும் பந்தய ஓட்டம் நடத்தின கதை உங்களுக்குத் தெரியும். முயல் ஓட்டத்தில் வீரனானாலும், வெற்றி பெற்றது ஆமை. ஏன்? அது தொடக்கத்திலிருந்தே முயற்சித்தது. விடா முயற்சியால் வெற்றிபெற்றது. அதுபோல் நீங்களும் உங்கள் பள்ளிக்கூடப் பாடங்களை ஆரம்பத்திலிருந்தே படித்துவரத் தெண்டித்தால் முடிவில் வெற்றி காண்பீர்கள். சுபம்!

**உங்கள் அன்புள்ள,**

**அண்ணா.**


---

**உங்கள் விஷயதானங்களை மேல்வரும் முகவரிக்கு அனுப்புங்கள்:**

**"அண்ணா", சஞ்சூசையப்பர் தாபனம்,**
**கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.**

## கணிதப்பகுதி

1. 10 மாணவர்கள் ஒரு வகுப்பில் இருக்கிறார்கள். அவர்களை வரிக்கு 4 பேராய் 5 வரியில் போடுங்கள் பார்க்கலாம்.
2. எத்தனை எட்டு எண்களைச் சேர்த்தால் ஆயிரம் வரும்.
3. ஒன்பது புள்ளிகள் வரிக்கு மூன்றாய் படத்தில் காட்டியபடி இருக்கின்றன. அவற்றை 4 கோடுகளால் சேருங்கள் பார்க்கலாம். ஆனால், கீறியகோட்டால் போகக்கூடாது. கையையும் விடாமல் தொடர்ச்சியாய் கீறவேண்டும்.




---

## நீதிமொழிகள்

1. "லஞ்சம் வாங்காதே, லஞ்சம் ஞானியை முதலாய்க் குருடனாக்கி விடும், நீதிமானின் வார்த்தைகளைக் கெடுத்து விடும்."
2. "புத்தியுள்ளமகன் தந்தையைச்சந்தோஷிக்கச் செய்கிறான். புத்தி கெட்டமகன் தாய்க்குக் கஸ்தியைக் கொடுக்கிறான்."
3. "பொய்சொல்லும் வாய் ஆத்துமத்தைக் கொல்லும்."

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பரிசுத்த பாத்திரத்தின் சரிதம்

ஆதர் மன்னரும் அவரது வீரர்களும் மாலைப் போசனத்திற்கென வட்டமேசையில் ஒன்றுகூடினர் ஆனல், வட்ட மேசையிலுள்ள பெறிலஸ் ஆசனத்தில் எவருமே உட்காராமல், அதை வெறுமனாக விட்டிருந்தனர். அவ்வாசனத்தில் ஏதோ மர்மமிருப்பதாகவும் அதில் அமருவோர், வீண் அபாயத்திற்குட்படுவார்களெனவும் எண்ணினர். இவர்கள் போசனபானம் பண்ணிக்கொண்டிருக்கையில், திடீரென ஒரு முதியவரும் அழகியவாலிபன் ஒருவனும் அறையினுள் பிரவேசித்தனர். முதியவர் தன்னுடன் வந்தவாலிபனை நோக்கி, "பெறிலஸ் ஆசனத்திலமர்ந்துகொள்" என்றார். வாலிபன் அவ்வாறே செய்ய எத்தனித்தபோது, அங்கிருந்த ஏனைய வீரர்கள், அவ்வாலிபனைப் பெறிலஸ் ஆசனத்திலிருக்க வேண்டாமென்றும், இருந்தால் அபாயமேற்படுமென்றும் எச்சரித்தனர். இருந்தும் அவ்வாலிபன் பெறிலஸ் ஆசனத்தில் அமர்ந்தான். உடனடியாகவே அவ்வாசனத்தில் "கலகாட்" என்ற நாமம் துலம்பரமாகப் பொறிக்கப்பட்டு விளங்கியது. அல்லாமலும் அவ்வாலிபனுடன் வந்த முதியவரும் மறைந்தார்.

ஏற்கனவே இவைகளை அறிந்திருந்த ஆதர்மன்னர், மறைந்தமுதியவர் மேர்லின் என்ற மந்திரவாதி என்றும், அங்கிருக்கும் கலகாட் வாலிபன் தன்படை வீரரில் ஒருவனாவான் என்றும் யூகித்துக்கொண்டார். கலகாட் ஆதரின் வீரர்களில் ஒருவனானன். காலகதியில் ஆதர்மன்னரையும், சேர். லான்சிலொட்டையும் ஒழிந்த ஏனையவீரர்களைப் பலபந்தயங்களிலும் தோற்கடித்துப் பலராலும் புகழப்பட்டான்.

ஒருநாள்மாலை வழக்கம்போல், ஆதர் மன்னருடன் வீரர்கள், வட்டமேசையில் கூடியிருக்கையில், ஓர் அதிசயம் ஏற்பட்டது. யாவரும் அவ்வதிசயத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றுநோக்கினர். மன்னல்வழியாகப் பிரகாசமான பிரபைஒன்று இடிமுழக்கத்துடன் தோன்றி அப்பிரபையின் நடுவே பரிசுத்தபாத்திரம் ஒன்று வெண் துயிலால் மூடப்பட்டுக் காணப்பட்டது. மண்டபத்தினூடாகச் சென்று மீண்டும் மறுமன்னல்வழியாக வெளியேசென்று மறைந்தது.

பெரும் வீரர்கள் யாவரும் அதிசயத்தில் ஆழ்ந்திருந்தனர். அப்போது அவ் வீரர்கள் மனதில் பலஎண்ணஅலைகள் மோதின. இறுதியில் தாம் இப்பரிசுத்த பாத்திரத்தைத் தேடியடையவேண்டும் எனத் தமக்குள்ளே பிரமாணஞ்செய்து கொண்டனர். எவராவது இப்பரிசுத்த பாத்திரத்தைக் காணும்பாக்கியம் அண்மித்து விட்டதென்பதை, அப்பாத்திரத்தின் வருகையைக்கொண்டு அறிந்தனர். அல்லாமலும் யேசுநாதரால் இறுதி இராப்போசனத்தில் உபயோகிக்கப்பட்ட இப்பாத்திரம் 'அறிமாதியா' நகரைச் சேர்ந்த யோசவ் என்பவரால் ஐரோப்பாவிற்குக் கொண்டுசெல்லப்பட்டதென்பதையும், பலநூறுவருடங்களாகப் பரிசுத்த ஆத்துமாக்களால் பேணப்பட்டுவந்ததெனவும் உலகில் பாவிகள் அதிகரித்ததும் இப்பாத்திரம் மறைந்ததையும் இவ்வீரர்கள் முன்கூடியே அறிந்திருந்தார்கள். எனவே, எல்லாவீரரும் இப்பரிசுத்த பாத்திரத்தைக் கண்டுபிடிப்பதற்கும், வறியவர்கட்காக உழைப்பதற்கும் தம் வாழ்க்கையை அர்ப்பணம் செய்தனர்.

சேர் கலகாட் வீரரோ உண்மைக்காக உழைப்பதற்கும், பிறருக்கு நன்மை செய்வதற்கும், எல்லாவற்றிற்கும் மேலாக, பரிசுத்தபாத்திரத்தைக் கண்டுபிடிப்பதற்கும் தம்வாழ்க்கையை அர்ப்பணம் செய்தார். சேர் கலகாட், சேர் பேசிவல் என்னும் வீரருடன் சேர்ந்து பரிசுத்தபாத்திரத்தைத் தேடியடையும் நோக்கத்துடன் ஒரு யாத்திரைசெய்யத் திட்டமிட்டு இருவரும் புறப்பட்டனர். சேர் கலகாட் செஞ்சிலுவை அடையாளமிட்ட கேடயத்தைக் கையிலேந்தி வெள்ளைக்குதிரையில் ஏறிப் புறப்பட்டார்.

யாத்திரையே அதிகதூரத்தைக் கடந்தது. வழியில் ஓர் பள்ளத்தாக்கை அடைந்தனர். அப்பள்ளத் தாக்கினூடாகச் சென்ற இருவீரர்களையும் திடீரெனத் தோன்றிய 20 வீரர்கள், தாக்க முன்வந்து, "எங்கிருந்து வருகிறீர்கள்?" என வினவினர். சேர் கலகாட், "நாம் ஆதர் மன்னர் அரண்மனையிலிருந்து வருகிறோம்" என விடைகொடுத்தார். இதைக் கேட்டதும் அவ்வீரர்கள் அவர்கள் இருவரையும் தாக்கினர். சேர் பேசிவல் தடக்குண்டு, நிலத்தில்வீழ்ந்தார். சேர் கலகாட்டின் தூண்டுதலால் மீண்டும் எழுந்து போர்செய்தார்.

சேர் கலகாட் தம்மை எதிர்த்துவந்த வீரர்களைச் செஞ்சிலுவைக் கேடயத்தினுதவியுடன் நாசஞ்செய்தார்.

பின்னர் மீண்டும் யாத்திரையைத் தொடர்ந்துநடத்தினர். மாதங்கள் கழிந்து, வருடங்கள் நிறைந்தன. ஒரு நாள் ஓர் பரந்தவெளிக்கு வந்தனர். கடற்கரையை அடுத்திருந்தது, அவ் வெளி. பொழுதும் இருட்டிக்கொண்டிருந்தது. இரவின் வருகையை உணர்த்தும்குறிகள் தோன்றின. வானத்தில் ஓர் சோதிமயமான பாலம் தோன்றியது. சேர் கலகாட் அப்பாலத்தையே உற்றுநோக்கியவண்ணமாக மேலே போய்க்கொண்டிருந்தார். சேர் பேசிவலால் மேலே போகமுடியவில்லை. அவ் விடத்தில்நின்று நடப்பதை அவதானித்தார். மேல்நோக்கிச்சென்ற சேர் கலகாட் பாலத்தை அடைந்தபோது நெருப்புப்பற்றிச் சுடர்விட்டு எரிந்தது. கலகாட் நெருப்பின்மத்தியில் ஓர்வித அபாயமுமின்றிப் போய்க்கொண்டிருந்தார். திடீரென இடிமுழக்கத்துடன் வானம் பிளந்து, மோட்சவாசல் தென்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோட்ச இராச்சியத்தின் மகிமையையும், அதன் மத்தியில் பரிசுத்த பாத்திரமிருப்பதையும், சேர் பேசிவல் கண்டதும், குனிந்துசெபவழிபாட்டை நடத்தினுர். செபம்முடிந்து பார்த்தபோது எதையும் காணவில்லை. அன்று தொடக்கம் இன்றுவரையில், அவ்வலிமை நிறைந்த, ஆன்மஇரட்சணியமுள்ள சேர் கலகாட்டைத் திரும்பவும் எவரும் கண்டதில்லை.

---

## தேவதாயின் பராமரிப்பு

ஓர் நாள் சூரியன் அஸ்தமித்தபின்னர், பன்னிரண்டு வயதுள்ள மலர், வீட்டுக்கு அருகாமையிலிருந்த ஓர் தோட்டத்தில் அற்பமெனிலும் சப்தமின்றி மெதுவாக உலாவிக் கொண்டிருக்கையில் திடீரெனச் சரீரம் நடுங்க, ஒருவார்த்தையும் உச்சரிக்கக் கூடாதவளாய், அசைவற்ற சிலைபோல் நின்ருள். பிறகு அலறிக்கொண்டு "அம்மா, அம்மா! ஓர் பாம்பின் மேல் நடந்துவிட்டேன் என் காலின் கீழே அது கிடக்கிறது. அம்மா, தாமதிக்காமல் வாருங்கள், ஓடிவாருங்கள்" என்று மலர்கூப்பிட, "பயபபடாதே! இதோ வந்துவிட்டேன், வந்துவிட்டேன்" என்று தாய் அடுத்த அறையிலிருந்து ஓர் கைவிளக்கை ஏற்றிக்கொண்டு, தன் மகள் இருந்த இடத்திற்கு ஓடிவந்தாள். ஐயோ! என்ன பயங்கரமானகாட்சி, தன் புத்திரி தனது சிறுகாலினுல் ஓர் நல்ல பாம்பின் தலையைத் தரையில் அழுத்திக்கொண்டிருப்பதையும், பாம்பு பிள்ளையின் காலைச் சுற்றிக் கொண்டு படமெடுக்க எத்தனிப்பதையும் கண்டாள். மகள் பலவீனத்தினிமித்தம் சில நிமிஷங்களுள் பாம்பை விட்டுவிடுவாள் என்பது தாய்க்கு உடனே விளங்கிற்று. ஆதலால் தாய் கிட்டவந்து, அவளைத் தன் கரங்களினுல் அரவணைத்துக் கொண்டு, அவள் சிறுகாலை அழுத்தப் பாம்பு கொஞ்சம்கொஞ்சமாகத் தான் பிடித்த பிடியைவிட்டு, தரையின்மேல் விழுந்தது. தாயும் பிள்ளையுமாகப் பாம்பின் தலையை நன்ருய் நசுக்கிக் கொன்ருர்கள்.

இது போலவே தினந்தோறும் நமது ஞானஜீவியத்தில் நடந்து வருகிறது. நரகப்பேய் நமது ஆத்துமத்தைக் கொன்றுபோடப் பிரயாசப் படுகிறது. அதை மிதித்துக்கொல்ல நமக்குப் பலம் வேண்டியபோது "அம்மா, தாயே, மரியே, எனக்கு உதவியாக வாருங்கள்" என்று நமது நேசத்தாயைக் கூப்பிடுவோமாக. உடனே அவள் நமக்கு உதவிபுரிய ஓடிவந்து, நம்மை அரவணைத்துத் தேற்றி, பாம்பின் தலையை நசுக்குவாள். திருச்சபை துவங்கினநாள் முதல் இந்நாள் வரைக்கும் அமலோற்பவ தாயின் உதவியினுல் பசாசின் தந்திரங்களுக்குத் தப்பித்துக் கொண்டவர்கள் அனந்தம்பேர்! சர்வேசுரன் சிங்காரத்தோப்பில் கொடுத்த வாக்குத்தத்தத்தின்படியே, அவள் நரகசர்ப்பத்தின் தலையைமிதித்து ஜென்மபாவமின்றி, தனது அடைக்கலத்தைத் தேடிவரும் மக்களையும் கபடுநிறைந்த அந்தச் சர்ப்பத்தின்விஷம் அண்டாமல் காத்துவருகிருள்.

பொ. டேவிற்

---

## நீதிமொழிகள்

4. "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில், இரக்கமடைவார்கள்."

6. "மோட்சத்தின் திரவியசாலை ஏழையின் கரங்கள்."

7. "சர்வேசுரனை சிநேகிக்கிறதும் அவருக்கு ஊழியம் செய்வதும்தவிர மற்ற யாவும் வீணிலும் வீண்."

8. "ஏழைகளுக்கு உன் பணத்தைக் கொடு, மோட்சம் உனக்குக் கொடுக்கப்படும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org